

# ரவியின் சுவடுகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் நினைவுகளின் சங்கமத்தில்
உயிர்பெற்று
என்றும் மரணிக்காமல் - எம்
உள்ளங்களில் உயிர்வாழும்
எம் இதய தெய்வத்திற்கு
இந்நூல் சமர்ப்பணம்.

மனைவி மற்றும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர் சின்னத்தம்பி ரவீந்திரன் அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# ரவியின் சுவடுகள்

01.10.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சின்னத்தம்பி ரவீந்திரன்

தோற்றம்: 05.11.1958 மறைவு: 16.08.2015

**திதி வெண்பா**

கோடியில் ஒருவனாம் இனியனாம் ரவீந்திரனை
தேடியே திரிந்து இடைவழியில் - உன்னதமான மன்மத
ஆடிப்பூர வளர்பிறைத் துதியையில்
ஈடில்லா ஈசன் தன்பதம் விருப்புடன் ஈர்த்தனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சதோத்திரம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் காப்பு

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்:
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமையணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பெரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாள் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையின் தனிப்பெருங் கூத்தின்
வந்து பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலி வளஞ்சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக் குறிப்புகள்

| | |
|---|---|
| முழுப்பெயர் | : சின்னத்தம்பி ரவீந்திரன் |
| பெற்றோர் | : சின்னத்தம்பி (அமரர்), பசுபதி |
| மாமன், மாமி | : சின்னத்துரை (அமரர்), மகேஸ்வரி |
| மனைவி | : சத்தியானந்ததேவி |
| பிறந்தது | : 1958.11.05 |
| படித்தது | : யா/ மாவிட்டபுரம் அ.மி.த.க. பாடசாலை, யா/ யூனியன் கல்லூரி |
| பதிவுத் திருமணம் | : 1993.07.14 |
| திருமணம் | : 1994.01.31 |
| உடன்பிறந்தோர் | : மேனகா, மகேந்திரன், பாலேந்திரன், அமுதா, அமரர் கருணாநிதி, சியாமளா, ரேணுகா, ரகுலேந்திரன் |
| மனைவியின் உடன்பிறந்தோர் | : ரேவதி, சாந்தா, சுதேந்திரன், குணேந்திரன் |
| சகோதர, சகோதரிகளின் வாழ்க்கைத் துணைகள் | : தர்மகுலசிங்கம், சாந்தி, பவானி, ரவீந்திரன், பாலச்சந்திரன், ஜெயசுதன், கலாவதி |
| மனைவி வழி, மைத்துனர், மைத்துனியின் வாழ்க்கைத் துணைகள் | : சிறிதரன், சுகிர்தரஞ்சன், றஜித்தாதேவி, ஜெனற் றஜனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனைவியின் கதறல்...

சனிக்கிழமை இரவு 9.30 மணி
"ஏலாமல் இருக்கிறியள், நித்திரை செய்யுங்கோ
காலையில் வந்திடுவன் கதைக்கலாம் தானே" என
வார்த்தைகளால் வருடிய நீங்கள்,
காலை ஐந்தரை ஆகியும் வரவில்லையே என - நான்
பரிதவித்து நின்றபோது
"ரவீந்திரன் இறந்திட்டார்" என்ற செய்தி - என் காதில்
பேரிடியாய் வீழ்ந்த கணமே
நான் கருகி மாண்டு விட்டேன் - எந்தன் ஆவி
உங்கள் உடல் என்ன பாடுபட்டதோ?"
என வேதனையில் துடிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனை கரம் பிடித்த நாள் முதலாய்
உனைப் பிரிந்து ஒரு கணமும் இருக்கேன்". என
காதல் மொழி பேசி நிற்பீர்
எம் உறவின் பெயர் சொல்ல
கருவிலே உருவான உயிரும் கனவாகிப் போனதனால்
ஒருவருக்கொருவர் குழந்தையாய் நாமிருந்தோம்
என்னைப் பாராட்டிச் சீராட்டி காலை உணவூட்டி
"பாடசாலை செல்" என்று அனுப்பி வைப்பீர் - எம்
இருவர் குடும்பத்து உறவுகளையும் ஒன்றாகப் பாவித்து
ஒற்றுமையாகவே உதவி ஒத்தாசைகள் செய்திடுவீர்.

பெரியவர்-சிறியவர், கற்றவர் -மற்றவர், ஏழை - பணக்காரன் என
தோற்றத்தைக் காணாது மனத்தினைக் கவர்ந்து
பக்குவமாய் நடப்பீர் - அவர் தரத்திலே நின்று
நயமாகப் பேசி நட்புடன் பழகிடுவீர்.
உம்முடன் பழகுவோர் பிரச்சினை அறிந்து
அன்புடன் நல்லது செய்து வைப்பீர் - புன்னகையுடனே
பொறுமையிலே பூமித்தாயாக இருந்த நீர். எல்லோருக்கும்
நல்ல "ரவி (அண்ணா மாமா நண்பன்...)" எனத் திகழ்ந்தீர்
உம் பட்டறிவும் பண்பட்ட நோக்கும் கண்டு- நான்
வியந்து போவதுண்டு. உவகையில் சிலிர்த்துப் போவதுண்டு.

எங்கு சென்றாலும் உம்முகம் செல்லும்
எல்லோரும் விரும்பிடும் தோற்றப் பொலிவுடையாய் - நீர்
ஏற்றிடும் பொறுப்புக்கள் அத்தனையிலும் மிளிரும் - அசகாய
சூரனையா!

பள்ளியில் படிக்கும் காலத்தில் கரப்பந்து. காற்பந்து. துடுப்பாட்டம்.
ஹொக்கி. மெய்வல்லுநர் போட்டியென
அனைத்திலும் திறமையுள்ள - பல்துறை வீரனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதுகள் பலபெற்ற விளையாட்டு வீரனையா
உனக்கென ரசிகர் கூட்டம் - என
ஒப்பற்ற தலைவனாக,
ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவரே...
இன்னும் உம் நிலை மாறாமல் உயர்வாகக் கணிக்கப்படும்
நிலையினைக் காண்கின்றேன் - என் தலைவன் பெருமை
கண்டு இறும்பூதெய்துகின்றேன்.

அன்புக் கணவனாய்த் துணைவனாய்
இன்னமுதூட்டும் இனிய தாயாய்
ஈடிணையில்லா என் சேயாய் - உன்
உதிரம் தந்தென் உயிர்காத்த தந்தையாய்த், தாதியாய்
எல்லா உறவுகளும் நீரே ஆகி
ஏகன் அனேகனாய் என்னுடனிருந்தீர்.
உற்றவர் பலர் அருகிருந்தும் - நீங்களின்றி
"எல்லா உறவும் போய்" ஏதிலியாய்
என்னுயிராம் உமைத் தேடித்
தனியாகத் தவிக்கின்றேன் என்னவரே

என் நினைவெல்லாம் நீயாக இருக்கின்றாய்
நித்தியமும் என் மனதைத் தொடுகின்றாய்
திடுக்குற்று விதிர்விதிர்த்துத் துடிக்கின்றேன்
திரும்பிவர மாட்டீரோ? என நினைக்கின்றேன்.
நிச்சயம் இது நடக்காது தெரிகிறது
நிஜமிதனை என் மனது ஏற்காது
இமைப் பொழுதும் ஆறாமல் அழுகிறது
எத்தனை காலம் இக்கதியோ தெரியாது
இடர்பட்டு ஏங்குகின்றேன் இதுவோ விதி?

உம் நினைவில் வாடும்

**அன்பு மனைவி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயின் கதறல்...

உன்துணை வேண்டுமென்று உன்னருகில் ஓடிவந்தேன்.
யார்துணை தேவையென்று எனைவிட்டு சென்றாயோ - அம்மா
என்று அழைத்திட்டு அனுதினம் வந்திடுவாயே அடுக்களையில்
நுழைந்திட்டு அகப்பட்டதை உண்டிடுவாயே - நோயுற்ற
போதெல்லாம் ஓடோடி வந்திடுவாயே - நோகாமல் எனை
அழைத்து வைத்தியரிடம் சென்றிடுவாயே.
அனுதினமும் உன் கடைதனை எட்டிப் பார்க்கின்றேன்
உன்முகம்தான் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்களின் கதறல்...

எங்கள் வாழ்வின் வழிகாட்டியே
எம் வாழ்வுக்காய் மெழுகென ஆனதுமேனோ?

ஏழைகளுக்கெல்லாம் வள்ளலாய்
எந்நாளும் உதவிடும் இதயம் ஓய்ந்ததுமேனோ?

எங்களுக்காய் வாழ்ந்த உங்கள் குணம் கண்டோ
எமதர்மனும் தனக்காக அழைத்தானோ?

எங்கள் குல தெய்வமே அண்ணா
எந்நாளும் மறவோம் மண்ணில் சங்கமிக்கும்வரை!

## மைத்துனர்களின் கதறல்...

மண்ணில் மலர்ந்த
மகத்தான மனிதனானவரே! - எமக்காய்
மைத்துனனாக வரம் பெற்றோமே
மரியாதை தவறாத குணமும்
மற்றவர்க்கெல்லாம் உதவும் பண்பும்
மரணம் வரைக்கும் அழைக்கும் என்று
மண்ணளவேனும் நினைக்கவில்லை
மனதில் நீங்காமல் நீங்கள் இருப்பதால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள், மருமக்கள்

தந்தைக்கு தந்தையாய்
தாய்க்கு தாயாய் - இத்
தரணியிலே எமக்காய் கிடைத்தவரே!

எதையும் எதிர்பாராமல்
எந்நாளும் செய்திடும் - உங்கள்
உதவிகளை பார்த்தோ? - இறைவனும்
எதிர்பாராத விபத்தினால்
எங்களை விட்டு உம்மை அழைத்தான்?

நீங்கள் விட்டுச் சென்ற
உங்கள் அன்பான நினைவலைகளுடன் வாழ்ந்து
இறுதிவரை உங்கள் சேவையை
நாமும் தொடர்வோம் நாமே!

# ஆசை மருமகள் ஆரபி...

அன்பு பெரிய மாமா எங்கள் வயதிற்கேற்ப எங்களுடன் நண்பனாக பழகி எல்லா தேவைகள் புரிந்து எல்லோருக்கும் பிடித்தமான உணவை சமைத்து தந்தமைக்கும் எங்களை கடற்கரைக்கு அழைத்துச் சென்றதற்கு நன்றி.

எங்கள் முக்கிய நிகழ்வில் பங்குபற்றுவதற்காகவா நீங்கள் இவ்வளவு காலமும் காத்திருந்தீர்கள். அதனால்தான் அது முடிந்து பத்து நாட்களில் காலன் உங்களை கவர்ந்தானா?

உங்கள் பிரிவால் வாடும்
**ஆசை மருமகள் ஆரபி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Periya Peri,

We want to thank you

We count on you again and thank you for being such an amazing uncle. We still remember the time when you and periyama came to England for the first time and we all went out together during christmath was really alluring having you and periyama here. This summer we really enjoyed playing carrem-board with you. When we came to Srilanka 3 years back i still dwell upon the time when we all sat together playing carrem-baord. It was really a great moment. You would always ask us everyday of what we liked to eat so you would buy it for us. This year the best part was when .we all went to the beach together. I remember when you took me on your scooty and went into town and went to a lot of shops. I really enjoyed riding on your scooty. You were an amazing uncle who brought us everything we wanted with happinessWe will always miss you Periya Peri.

With deepest sympathy,

From your loving niece and nephew
**Thulasi & Yathavan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் ராகவி, ஆகாஷ்

மாமியை அழைத்துச் செல்ல வந்தீர்களே
மாமியோடு மண்ணைவிட்டுச் சென்றீர்களே
எம்மோடு பெரியப்பாவன்றி நண்பராக உறவாடி
ஊர்க்கதைகள் கூறி உறவுகள் வளர்த்து
உத்தமர்களாக வாழ உவகைள் கூறுவீர்களே
உங்களின் இழப்பால் ஊர் வெறுமையாகியதே
உங்களின் ஆத்மா சந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

## அத்தான், ரவியண்ணை

கடவுளே உனக்கு கருணையே இல்லையா?
கள்ளங்கபடமில்லா எங்கள் அத்தானை - ரவியண்ணையை
பறித்தெடுக்க எப்படி காலனை அனுப்ப மனதுவைத்தாய்?
பரிதவித்து பதறுகிறா அக்கா. பக்கத் துணையை இழந்து!

சுற்றத்தார் கூடியிருந்து உங்களை வரவேற்றோம்
அன்று (14.7.1993) உங்கள் பதிவுத்திருமணம்
பிடாரித்தாயின் கொடியேற்றம்! - அதே
சுற்றத்தார் கூடியிருந்து உங்களைப் பறிகொடுத்தோம்
இன்று 16.09.2015 பிடாரித்தாயின் கொடியிறக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்போற்றும் பண்பாளனாக இருந்தீர்களே!
சீர்மிகு செம்மலாக சிறந்து விளங்கினீர்களே
யார் கண்பட்டதுவோ! எம் குடும்ப தலைவன் மீது
ஆருமற்ற பாவியானா அக்கா - சத்தியா இன்று

நினைவு மலரெழுதும் நிலைக்கானோம் அத்தான்
நினைவெல்லாம் உங்கள் நினைப்பே - அனுதினமும்
நினைப்பதெல்லாம் நடப்பதில்லை மனித வாழ்வுதனில்
நினைந்து நினைந்து எதை எண்டு எழுதுவது உங்களுக்கு

உங்களைத் தேடிய உறவுகள் மாமியும் அன்ரியும்
வீட்டின் மூத்தபிள்ளை - எங்கே என்று தேடுகின்றார்கள்
உங்களைக் காணாது முற்றம் முதல் பின் கேற் வரை
வெறிச்சோடிப்போச்சு.
வீட்டின் (எங்களின்) சந்தோசத்தை சந்தோசமே
பறித்துவிட்டதையா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**சிறிதரன் - ரேவதி, ரஞ்சன் - சாந்தா, பெரியதம்பி - றாஜி**
**சின்னத்தம்பி - ஜெனற், உங்களுடன் தொலைந்த சின்னக்காவின்**
**சிறியண்ணை, கிளியண்ணன் - உமா, ரவி-விதினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவியை அடைந்தார் இரவீந்திரன்

தெல்லிப்பளை அம்பனையைப் பிறப்பிடமாகவும் ஆனைக் கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரவீந்திரன் விபத்தில் சிக்கி அகாலமரணமடைந்த செய்தியைக் கேட்டு உண்மையிலேயே அதிர்ந்துபோனேன் என்றால் அது மிகையாகாது. அமரர் அவர்கள் திருமணம் செய்த சின்னத்துரையின் மகள் சத்தியானந்ததேவியை சிறு பராயம் தொட்டே நன்கறிவோம். இவர்கள் இருவரும் கருத்து ஒருமித்து "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை" என்ற கருத்துக்கமைய பாலும் சுவையும்போல வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

அமரர் அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும், மாதத்தில் வரும் சதுர்த்தி போன்ற விசேட தினங்களிலும் எமது ஆலயத்திற்கு வந்து வழிபாடு நடத்திவிட்டே தமது கடமைகளை ஆரம்பிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

எப்போதும் சிரித்தமுகமும் இனிய சுபாவம் அதிர்ந்து பேசாத தன்மை, எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளும் பக்குவம், எல்லோருக்கும் உதவிசெய்ய வேண்டும் என்ற உயர்ந்த கொள்கை எல்லா உயிர்களிடத்தும் கருணைகாட்டும் சுபாவம், குருபக்தி, குருவிசுவாசம் என்பன இவரிடத்தில் நான் கண்ட பல பண்புகளில் சிலவாகும்.

வள்ளுவன் கூறியதுபோல்

"இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளின் அடிக்கு இலக்கணமாக வாழுந்தார் என்றால் அது உண்மையான கூற்றேயாகும். அதாவது இவரைப் பெறுவதற்கு இவருடைய தாய், தந்தையர் என்ன புண்ணியம் செய்தனரோ? என்று கூறும்படி நடத்தலே மகனின் உண்மையான கடமை அதுவே பெற்றோருக்கு பெருமை. அவ்வகையில் இவர் வாழ்ந்து பெற்றோருக்கு பெருமை சேர்த்திருக்கிறார் என்றே கூறவேண்டும். இரவி என்பது சூரியனைக் குறிக்கும். இந்திரன் என்றால் தலைவ-னைக் குறிக்கும் சொல். எனவே இரவீந்திரன் என்பது சூரியனுக்கே தலைவர் என்பது பொருள் ஆகும்.

இது ஒரு புறம் அமைய எமது ஆகம கோட்பாட்டின் படி இறைவனுக்கு முக்கண்ணன் எனப்து பெயர். அவனுக்கு வலது கண் சூரியன், இடது கண் சந்திரன் என்று கூறப்படுகிறது. எனவே அவ்வகையில் பார்க்கும்போது இந்த இரவீந்திரன் சூரியனைச் சேர்த்து அவனிடமுள்ள கண்ணைச் சேர்ந்தார் என்றுதானே அர்த்தம். உலகிற்கே ஒளியைத் தரும் சூரியன் இந்தத் தலைவனை (இரவீந்திரனை தன்னிடத்தே அழைத்து சிவனிடம் சேர்த்துள்ளான் என்றே யாம் கருதுகின்றோம். அதன்மூலம் மென்மேலும் உலகிற்கு ஒளி கிடைக்கவேண்டும். உயிர்கள் வாழவேண்டும். இவரின் தன்னலமற்ற சேவை தொடர வேண்டுமென்று அழைத் துக்கொண்டான் என்று எண்ணத்தோன்றுகின்றது.

இவ்வாறு யாம் கருத இன்னும் ஓர் காரணம் உண்டு. அடிக்கடி நோயினால் பாதிக்கப்படும் அன்புத் துணைவியார் நங்கை நல்லாள் சத்தியானந்ததேவி நிரந்தரமாக கணவனின் பிரிவால் ஆனந்தத்தை இழந்தபோதிலும் அதன் பின்னர் நோயினால் பாதிக்கப்படவில்லை எனும்போது இவரது ஆன்ா தோன்றாத் துணை யாக இருந்து அவரது அன்பு மனைவியைப் பாதுகாத்துவருகின்றது என்றே பொருள் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு கொடியது. இதை எழுதுவது சுலபம். எனினும் தமக்கு. தமக்கு என வரும்போது சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் அதன் தாக்கம் தெரியும். ஏக்கம் புரியும். தவிப்பை வார்த்தைகளினால் விபரிக்க இயலாத நிலை ஏற்படும்.

அமரர் அவர்களின் பிரிவால் ஏங்கித் தவிக்கும் துடிதுடிக்கும் அவர்மீது என்றும் மாறாத அன்பு கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல இறைவன் தான் மனச்சாந்தியை வழங்கவேண்டும். வழங்குவான் என்ற நம்பிக்கையில் காலம் அவர்களின் மனத்துயரை சிறிது சிறிதாக மாற்ற பெருமானின் திருவருளைப் பிரார்த்தித்து நிறைவுசெய்கின்றேன்.

சாந்தி சாந்தி

**சோ. சிவகுமாரக்குருக்கள்**
கரைப்பிரான்
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவர்களை காலன் விடுவதில்லை போலும்!

அமரர் சின்னத்தம்பி ரவீந்திரன் 1974ம் ஆண்டில் விளை யாட்டுத்துறை மூலம் எனக்கு அறிமுகமானார். 1976ம் ஆண்டு யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டியில் தெல் லிப்பளை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யும் இறுதிப்போட்டியில் கலந்துகொண்டன. அப்போட்டியின்போது ரவீந்திரனின் திறமைகளை அறிந்துகொண்டேன்.

துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், ஹொக்கி, மெய்வல்லுநர் போட்டி என எல்லா விளையாட்டுக்களிலும் முத்திரைபதித்தவர் ரவீந்திரன். போட்டிகளின்போது ஏற்பட்ட நட்பு வளர்ந்து வந்தது. மிகவும் அமைதியான சுபாவமுடைய ரவி விளையாடும்போது ஆக்கிரோசமானவராகக் காணப்படுவார். சிக்ஸர் விளாசுவதில் பேர்போனவர். இவர் மைதானத்திற்குள் இறங்கும்போது, "வாள் வெட்டு ரவி இறங்குகின்றான் பந்துகளைத்தேட ஆட்களை அனுப் புங்கள்" என்று அவரது ரசிகர்கள் கூறுவதற்கேற்ப மைதானத்தில் நிற்கும் நேரம் முழுவதும் பந்து பவுண்டர், சிக்சர்களாக மாறும்.

இருவரும் நாட்டில் இல்லாத காரணத்தினால் பல ஆண்டு களுக்கு பின் என்னுடன் சிங்கப்பூரில் வேலை செய்த பாஞ்சான் சிறீயை ஒருமுறை சந்திக்கும்போது ரவியையும் அங்கே கண் டேன். அவர்கள் இருவரும் உறவினர்கள் என்பதை தெரிந்து கொண்டேன். அன்றுமுதல் காலன் அவரை அழைக்கும்வரை சந்திக்கும்போதெல்லாம் விளையாட்டுத்துறையின் ஏற்ற இறக்கங் களை பேசிக்கொள்வோம். மிகவும் இரக்கசுபாவமும் அமைதியும் அவரது நற்குணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்களை காலன் அதிககாலம் வாழவிடுவதில் லைப்போலும் என்ற கூற்றுக்கிணங்க காலன் விரைவில் அவரை அணைத்துக்கொண்டுவிட்டான். கோரவிபத்தில் ரவியை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்துக்கு ஆறுதல் அளிக்கவும் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**சண். தயாளன்**

உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி)

வலயக் கல்வி அலுவலகம்

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமைக்கு ஒரு இலக்கணம்

அமரர் சின்னத்தம்பி ரவீந்திரனின் காலத்திற்கு முன்னான மறைவு அவரது குடும்பத்தினரின் உள்ளூர் உறவினரின் நெஞ்சங்களை சிதைத்ததுபோலவே லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினரது மனங்களையும் சிதறடித்தது.

எமது விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினர் அவர். அனைத்து உறுப்பினரோடும் சகஜமாகவும் அன்பாகவும் பண்பாகவும் பேசுவது மட்டுமன்றி முக்கியமாக அவர்களை வழிப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவார். தேவையான நேரத்தில் கண்டிப்பாகவும் அவசியமானபோது பாராட்டுவதாகவும் பொறுத்த இடங்களில் தட்டிக்கொடுப்பவராகவும் அவரது தோழமைஅமைந்தது. "ரவி அண்ணா" என்ற அந்த அழைப்பு சொல் கழக உறுப்பினரின் ஆழ மனதில் இருந்து எழும் சொல்லாகவே இருக்கும். அந்த அளவுக்கு எம்முடன் மிக நெருக்கமாக இருந்தார் என்பதே சரியானது. இரண்டறக் கலந்திருந்தமையால்தான் விட்டுப்பிரிந்தபோது நெஞ்சம் குமுறத்தொடங்கியது. அது இன்றுவரை ஆறவில்லை. அவ்வப்போது தலைகாட்டிக்கொண்டிருக்கின்றது.

கழகம் வேறு பல கழகங்களோடு மச் விளையாடியுள்ளது. எதிரணி பலம் வாய்ந்தது எனக் கருதினால் ரவி அண்ணை நீங்கதான் கப்ரின் என்போம். மறுக்காமல் ஏற்பார். பலதடவைகளில் வெற்றியோடுதான் வந்தோம். அவரது விளையாட்டிலும் ஒரு அழகு இருந்தது. அதனைப் பார்ப்பதற்காகவும் சிலர் எமது மைதானத்திற்கு வந்ததுண்டு. ரவி அண்ணை ஒரு உத்தம புத்தி [illegible] கழகத்கதின் தலைவன். பண்பான குடும்பத்தலைவன்,

தோழர்களை விட்டுக்கொடுக்காமல் தட்டிக்கொடுத்து பழக்கிய பயிற்சியாளன். பிணக்குகள் ஏற்பட்டபோது தீர்த்துவைத்த நீதிபதி. சமூகத்தைத் தனது புன்சிரிப்பால் கவர்ந்தவர்.

ரவி அண்ணா ஒரு பெயர்தான். ஆனால் அதனுள்ளே ஊடுருவியிருந்த வடிவங்கள் பல. அவரது அத்தனை வடிவங்களையும் கண்டவர்கள் நாம் ஆகையால் நாம் அசையும் இடமெல்லாம் பார்க்குமிடமெல்லாம் திரும்பும் இடமெல்லாம் ரவி அண்ணையை மானசீகமாகக் காண்கிறோம். எமது கழகத்தின் சார்பாக இதனை எழுதுகின்றபோது கண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறத. ஒரு கட்டத்தில் துக்கம் தொண்டையை அடைத்தது. வார்த்தைகள் மேலும் வரவில்லை!!! ரவி அண்ணா!! ரவி அண்ணா! ரவிஅ...

ஓம் சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

**சு. சுபநாதன்**

வைத்தியக் கலாநிதி T. மயூரன்

தலைவர்

லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

பொன்னையா லேன்

ஆனைக்கோட்டை

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மைத்துனரின் திருமணத்தில் பெற்றோராக



கடைசியாக இருவரும் எடுத்த படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதனை இழந்துவிட்டோம்

கடந்த மாதம் பதினாறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை... காலை ஆறுமணியிருக்கலாம்... ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி தேவாலயத்தில் வழமையாக நடைபெறுகின்ற ஞாயிறு காலைத் திருப்பலிக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளில் நமது குடும்பத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

வீட்டுக் கேற்றடியில் யாரோ அழைக்கின்ற சத்தம்... விடிந்ததும் விடியாததுமாகிய இந்நேரத்தில் யாராக இருக்கும் என்ற கேள்விக்குறியோடு நான் முன்னே செல்ல, என்னைத் தொடர்ந்து ஒரு நண்பன்... நான் கேற்றைத் திறக்கிறேன்... நண்பன் நிற்கிறான்... அவனது முகத்திலிருந்து துயரத்துளிகள் வழிகின்றன... அவனது உடலிலே பதட்டம்...

"சேர்... சத்தியா ரீச்சரின்ரை புருசன் இரவீந்திரன்... வாகன விபத்திலை... இறந்திட்டாராம்..." நண்பனின் வாயிலிருந்து வார்த்தைகள் குறைமாதக் குழந்தையாய் பிரசவிக்கின்றன....

அந்தச் செய்தியால்... நமது செவிப்பறைகள் அதிர்ந்து... அவிந்து... அனைவரும் உறைந்துபோய்விட்டனர்...!

திருப்பலிப் பூசைக்குப் புறப்பட்ட நாங்கள்...

மனித ஆன்ம விடுதலைக்காகப் போராடிய தனது மகனைக் கல்வாரி மலையில் பலிகொடுத்து துயரப்பட்ட மரியாள் போல், வாகன விபத்தில் தனது வாழ்க்கைத் துணையைப் பலிகொடுத்துத் துயரப்பட்டிருக்கும் சத்தியா ரீச்சரின் வீடு நோக்கிப் புறப்படுகின்றோம்.... வீட்டிலிருந்து புறப்பட்டு, பாடசாலை ஒழுங்கையால் நடந்து... குருசு மதவடிக்கு வந்துவிட்டோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவீந்திரனின் மரணச் செய்தி நமது குடும்பத்தினரை உறைய வைத்ததுபோல், இரவீந்திரனின் மரணச் செய்தி இந்தக் கிராமத்தையே உறையவைத்திருந்தது...

சத்தியா ரீச்சரின் வீட்டுக் கேற்றடியில் இந்தக் கிராமத்து மக்கள் வதங்கிப் போய் நிற்கின்றனர்... அவர்களை விலத்திக்கொண்டு சத்தியா ரீச்சரின் வீட்டுக் கேற்றையும் தாண்டி உள்ளே செல் கிறோம்...

"வெளிநாட்டிலிருந்து திருமணத்துக்காக வந்த மாப்பிளை யையும் அவரது குடும்பத்தினரையும் கொழும்பிலிருந்து அழைத்து வந்த இரவீந்திரனின் வாகனம்... புத்தூர் சந்திக்கு அண்மையாக வீட்டு மதிலோடு மோதி... இரவீந்திரனும் வான் சாரதியும் அந்த இடத்திலேயே இறந்துவிட்டனராம்... ஏனையவர்களும் மிக ஆபத்தான நிலையில்" இந்தச் செய்தியை சத்தியா ரீச்சரின் சகோதரி யான ரேவதி கூறமுடியாமல் கூறிமுடிக்கின்றார்.

சுனாமி என்ற கடல் கொந்தளிப்பு கடற்கரையில் வாழ்ந்த மக்களைக் காவு கொண்டதுபோல்... 'வான் விபத்து' என்ற சுனாமி... சத்தியா ரீச்சரின் குடும்பத்தையும் காவுகொண்டுவிட்டது... இப்படி எனது மனம் கூறுகின்றது...

அந்த இடத்தில் நிற்கின்ற அல்லது சத்தியா ரீச்சரைச் சந்திக்கின்ற மனப்பலத்தை நாம் இழந்துவிட்டோம்...

சத்தியா ரீச்சரின் வீட்டிலிருந்து புறப்பட்ட நாம் மானிப்பாய் றோட்டுக்கு வருகின்றோம்... வீதியின் மறுபக்கத்தில், சத்தியா ரீச்சரின் வீட்டுக் கேற்றுக்கு நேராக...

இரவீந்திரன் நடத்திய கடை... அது பூட்டப்பட்டுக் கிடக்கின்றது.... இந்தக் கடை வாசலில் இரவீந்திரனும் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை நாள் சந்தித்துப் பேசி மகிழ்ந்திருப்போம்... பழைய நினைவுகள் எனது மனத்தல் தளிர்விட்டு, இரவீந்திரனின் இறந்த கால வாழ்க்கையை இரைமீட்புச் செய்கின்றது.

இரவீந்திரன் பற்றிய ஒரு மனப்பதிவு என் மனத்திலுண்டு... 'நினைவுகள் என்றும் மரணிப்பதில்லை' என்று கூறுவார்களே... அதுதான்..!

இந்த மனப் பதிவு என்பது, ஒரே நாளிலோ அல்லது, ஒரே முறையிலோ ஏற்படுவதல்ல. தொடர்ச்சியாக ஏற்படுகின்ற சந்திப்புகள், தொடர்பாடல்கள், செயல்முயற்சிகள் என்பவற்றினூ டாகச் சிறுகச் சிறுகவே ஏற்படுகின்ற பதிவாகும். இரவீந்திரனோடு பழகிய அந்த அனுபவப் பதிவுகள்தான் இப்போது எனது மனதில் திரைப்படம் போல் விரிகின்றன.

தெல்லிப்பளையில், அம்பனை கிராமத்தை வாழ்விடமாகக் கொண்ட திரு. திருமதி சின்னத்தம்பி - பசுபதி தம்பதிகளுக்கு 05.11.1958 இல் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவர். மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்விப் பொது தராதர உயர் கல்வியையும் பெற்றவர். 31.01.1994இல் நமது அயலவரான அமரர் சின்னத்துரை அவர்களின் மகளைத் திருமணம் செய்ததன் மூலம் ஆனைக்கோட்டையை வாழ்விடமாகக் கொண்டிருந்தார். இவரின் துணைவியாரான சின்னத்துரை சத்தியானந்ததேவி என்ற 'சத்தியா ரீச்சர்' எங்கள் குடும்பத்தோடு நெருக்கமானவராக இருந்ததால் இரவீந்திரனோடு நெருக்கமாகப் பழகுகின்ற சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது.

இவரோடு பழகத் தொடங்கிய குறுகிய காலத்திலேயே இவரை எனக்குப் பிடித்துவிட்டது. இவரிடம் பாரதி கூறிய 'நேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பார்வை'யை அடியொற்றிய போக்கே காணப்பட்டது. எந்தச் சூழ்நிலையிலும் தெளிவான மனத்தோடும், நடுநிலைப் பண்போடும் நடந்து கொள்ளும் பண்பு குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

'நேர் கொண்ட பார்வைப் பண்பு என்பது மிக உச்சமான தொரு பண்பாகும். இந்த உச்சமான பண்பு இவரிடம் எப்படி ஏற்படடதென்ற கேள்வி எனக்கு இல்பாகவே ஏற்பட்டது. இவரிடம் இயல்பாகவே உள்ளுறைந்திருந்த விளையாட்டுத்துறை ஆர் வமும், மிகக் கூர்மையான திறமைகளுமே இவரது சிந்தனைத் தெளிவுக்கும், உறுதியான செயற்பாடுகளுக்கும் அடிநாதமாக வும், ஆதாரசுருதியாகவும் அமைந்திருக்கவேண்டும் என்ற முடிவுக்கே என்னால் வரமுடிந்தது. ஒரு விளையாட்டு வீரன் தின சரி சவால்களை எதிர்கொள்கிறான். விளையாட்டு மைதானத்தில் பகிரங்கமாகவே தனது எதிர்த்தரப்பினரைச் சந்திக்கின்றான். விளையாட்டில் ஏற்படுகின்ற வெற்றி, தோல்விகளைப் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கமாகவே ஏற்றுக்கொள்கிறான். அதுமட்டுமல்ல, விளையாட்டுக் களத்தில் தன்னோடு மோதியவர்களை விளையாட்டு முடிந்ததும் நட்போடு கைகுலுக்கி கட்டியணைத்துக் கொள்கிறான்.

ஒரு கல்விக்கூடத்தில் கண்டிப்பாக ஒரு விளையாட்டு மைதானம் அமையவேண்டும். தினசரி பிள்ளைகள் விளையாட வேண்டும் அப்போதுதான் அந்த மாணவரிடம் வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கின்ற பண்புகள் ஏற்படுமென கல்வி உளவியலாளர்கள் வற்புறுத்துகின்றனர்.

அமரர் இரவீந்திரன் அவர்களின் கடந்தகால வாழ்க்கையில் பெரும்பகுதி விளையாட்டு மைதானத்திலேயே கழிந்திருக்கின்றது என்பது பலருக்குத் தெரியாத உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை இவர் விளையாட்டுப் போட்டிகளில் பெற்றுக் கொண்ட வெற்றிச் சான்றிதழ்களைப் பார்க்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

யூனியன் கல்லூரி விளையாட்டுப் போட்டி, யாழ்ப்பாணம் மேற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி, யாழ்ப்பாணம் மாவட்ட விளையாட்டுப் போட்டி காங்கேசன் துறை கல்விப் பிரிவு விளையாட்டுப்போட்டி, பலிகாமம் வடக்கு கிராமசேவையாளர் பிரிவக்குட்பட்ட விளையாட்டுப்போட்டி, தெல்லிப் பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விளையாட்டுப் போட்டிகளென அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றி ஐம்பது வெற்றிச் சான்றிதழ்கள் அவரிடமிருந்தன.

நான் பிரமித்துப் போனேன்!

இரவீந்திரன் பெற்றுக்கொண்ட வெற்றிச் சான்றிதழ்களில் மிக முக்கியமானவற்றையும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமான தாகும்.

1. 1975இல் யூனியன் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் 'சம்பியன்'
2. 1975 இல் யாழ்ப்பாணம் மேற்கு கல்வி வலயப் பாடசா லைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் 'கொக்கி' விளையாட்டில் 'சம்பியன்'

   1976 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட உதைபந்தாட்டப் போட்டியில் விருது. இவற்றைவிட,

ஒரு நாள் நான், ஆனைக்கோட்டை 'யூனியன் மைதானத்தில்' நடந்த 'கிரிக்கெட்' போட்டியைப் பார்ப்பதற்காககச் சென்றிருந்தேன் அங்கு அந்தப் போட்டிக்கு இரவீந்திரன் அவர்களே நடுவராகக் கடமையாற்றிக் கொண்டிருந்ததைக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருநாள் ஆனைக்கோட்டை பொன்னையா வீதியிலுள்ள 'லெனின் ஸ்ரார்' விளையாட்டு மைதானத்தில் நடந்த உதைபந்தாட்டப் போட்டிக்குச் சென்றிருந்தேன். அங்கும் இரவீந்திரன் அவர்களே நடுவராகக் கடமையாற்றிக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

தெல்லிப்பழைப் பிரதேச விளையாட்டு வரலாற்றில் பதிவானவரும், பல்துறை விளையாட்டு வீரரும், நடுவுநிலைச் சிந்தனையாளருமான இரவீந்திரன் என்ற உன்னதமானதொரு மனிதனை நாம் இழந்துவிட்டோம்.

சத்தியா ரீச்சர் தனது துணையை இழந்துவிட்டார்.

இரவீந்திரனின் உறவுகள் ஒரு உறவை இழந்துவிட்டனர்?

ஆனைக்கோட்டை மக்கள் ஒரு மனிதனை இழந்துவிட்டனர்.

இந்த மூன்று இடைவெளிகளுமே நிரப்பப்படமுடியாத இடைவெளிகள்...

பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் உள்ள இடைவெளி...

அதுதான் ஒரு மனிதனை அளக்கும் அளவுகோல்..!

**கே.ஆர். டேவிட்**

ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபச் சுடரொளி மறைந்தாலும் என் நெஞ்சத்தே என்றும் நிலைத்திருப்பாய்.

இயற்கை அழகும், நீர்வளம், மண்வளம் மிக்க பிரதேசமாகவும், வரலாற்று பெருமைகள் கொண்ட ஆலயங்கள் புகழ்பூத்த பெரும் கல்லூரிகள், பெருமைமிக்க சான்றோர், அறிஞர்கள், கல்வி மான்கள், அரசியல் தலைவர்கள் பலரை தன்னகத்தே கொண்ட நிறைவான தெல்லிப்பழை பிரதேசம் பல கிராமங்களை தன்னகத்தே கொண்டிருந்தது.

சிறப்புமிக்க இப்பிரதேசத்தின் அம்பனை பகுதியை தன் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வாழ்விடமாகவும் கொண்ட என் மாணவன் அமரர் சின்னத்தம்பி ரவீந்திரனின் திடீர் மரணச் செய்தியால் ஏற்பட்ட அதிர்ச்சியல் இருந்து மீளமுடியாது தவிக்கின்றேன். அமரரின் வாழ்க்கை எனும் தீபச்சுடரின் ஒளி மறைந்தாலும் அவனின் நினைவுகள், கடந்தகால சவடுகள் என்றும் எம் நெஞ்சத்தே நிறைந்திருக்கும்.

பெருமை மிக்க யூனியன் கல்லூரியில் மாணவனாகவும் பின்பு ஆசிரியராகவும் சேவையாற்றும் பெரும்பாக்கியம் பெற்றவர்களில் நானும் ஒருவன். எங்கள் கல்லூரியில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்கள் மீதும் அன்பும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்து அவர்களை வழிப்படுத்தி அன்பும், பண்பும், ஆற்றலும் அறிவும் இயல்பான சிறந்த தலைமைத்துவ பண்புகள் கொண்ட மாணவனாக அமரர் சின்னத்தம்பி ரவீந்திரனை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம்கண்டு அவரை பல்துறை சாதனையாளராகவும் யூனியன் கல்லூரி மாணவர்களின் நினைவுக்கு உரியவராயும் வளர்த்தேன்.

கல்லூரியின் சகல துறைகளிலும் பிரகாசித்ததுடன் அனைத்து ஆசிரியர்களினதும் நன்மதிப்புக்குரியவராகவும் இருந்தார். சிறந்த பந்துவீச்சாளராக சிறந்த துடுப்பாட்ட வீரராக சகலதுறைகளிலும் கிரிக்கற்றில் பிரகாசித்ததுபோல உதைபந்தாட்டம், கொக்கி, மெய் வல்லுநர் போட்டிகளிலும் பல சாதனைகள் படைத்தார். சிறந்த அணித்தலைவராக இருந்ததுடன் பல வெற்றிகள் பெற்று கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். விளையாட்டுத்துறையுடன் கல்லூரியிலும் சிறந்த மாணவராக இருந்தார். நாட்டு நிலைமை, குடும்ப சூழல் காரணமாக உயர்கல்வியை தொடரமுடியாது வெளிநாட்டிற்கு தொழில்வாய்ப்புப் பெற்றுச் சென்றார். தான் கற்ற கல்லூரியின் மீதும் கற்பித்த ஆசிரியர்கள் மீதும் தனது இறுதிக்காலம் வரை மதிப்பும் மரியாதையும் கொண்டு இருந்தவர்.

எனது மாணவியும் ஆசிரியையுமான சத்தியாவை திருமணம் முடித்து மகிழ்வுடன் வாழ்ந்தார். தான் புகுந்த இடமான ஆனைக்கோட்டையிலும் லெனின் ஸ்ரார் விளையாட்டுக் கழக வீரராக இருந்ததுடன் செயற்பாட்டுக்கும் உதவியிருந்தார். எல்லோரது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராய் வாழ்ந்த என் மாணவனின் இழப்பும் ஏற்பட்ட விதமும் மறக்கமுடியாத சம்பவமாகும்.

என் மனதை ஆற்ற எனக்கே தெரியா நிலையில் ரவியை இழந்து தவிக்கும் மனைவிக்கு ஆறுதல் கூறவதா? குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதா? என பெரும் வேதனையில் தவிக்கின்றேன். அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன்.

என்றென்றும் உன் நினைவால் ஏங்கும்

**வி. பாலசிங்கம்**

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்

வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1994.01.31 இல் திருமணத்தின்போது



1997 இல் மனைவியுடன் திருமண நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து

"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே".

அத்தி மலர்களை மாலையாய் அணிந்துள்ள சிவபெருமானின் அன்பிற்குரிய விநாயகரை எப்பொழுதும் வணங்குவோம்.

1. அறம் செய விரும்பு
தருமம் செய்ய ஆசைப்படு.

2. ஆறுவது சினம்
கோபம் தணியத் தகுவதாம்.

3. இயல்வது கரவேல்
கொடுக்க முடிந்த பொருளை இரப்பவர்க்கு ஒளியாமல் கொடு.

4. ஈவது விலக்கேல்
ஒருவர் மற்றொருவர்க்குக் கொடுப்பதைக் கொடுக்க வேண்டாமென்று தடுக்காதே.

5. உடையது விளம்பேல்
உன்னுடைய பொருளை அல்லது கல்வி முதலிய சிறப்பை நீயே புகழ்ந்து பேசவேண்டா.

6. ஊக்கமது கைவிடேல்
எத்தொழில் செய்யும்பொழுதும் மனவலிமை யினைக் கைவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எண் எழுத்து இகழேல்
கணிதத்தையும், இலக்கணத்தையும் இகழாமல் நன்றாகக் கற்றுக்கொள்.

8. ஏற்பது இகழ்ச்சி
இரந்துண்டு வாழ்வது பழிப்பாகையால் ஒருவரிடத்தும் சென்று ஒன்றை வேண்டாதே.

9. ஐயம் இட்டு உண்
இரப்பவர்க்குப் பிச்சையிட்டுப் பின்பு உண்ணு.

10. ஒப்புரவு ஒழுகு
உலகத்தோடு பொருந்த நடந்துகொள்.

11. ஓதுவது ஒழியேல்
அறிவு தரும் நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக் கொண்டிரு.

12. ஔவியம் பேசேல்
ஒருவரிடத்தும் பொறாமைகொண்டு பேசாதே.

13. அஃகம் சுருக்கேல்
மிகுந்த இலாபத்துக்கு ஆசைப்பட்டுத் தானியங்களைக் குறைத்து விற்காதே.

14. கண்டொன்று சொல்லேல்
பார்க்காததை பார்க்காதவற்றைப் பார்த்ததாகப் பேசாதே

15. ஙப் போல் வளை
'ங' என்னும் எழுத்தானது எப்படி தான் பயன்னுள்ளதாக இருந்து தன் வருக்க எழுதுக்களை தழுவுகிறதோ அது போல நாமும் நம்மைச் சார்ந்தவர்களால் என்ன பயன் என்று பாரா-மல் அவர்களை காக்க வேண்டும். "ங" என்னும் எழுத்தை கூர்ந்து நோக்கினால், ஒருவர் வளைந்து வணக்கம் சொல்வது போல் உள்ளது விளங்கும். அதைப்போல பணிவாக பெரிய-வர் முன் வளைய வேண்டும் என்று ஔவை உரைத்ததாகவும் எடுத்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. சனி நீராடு
சனி(குளிர்ந்த) நீராடு.

17. ஞயம்பட உரை
கேட்பவருக்கு இன்பம் உண்டாகும் படி இனிமையாகப் பேசு.

18. இடம்பட வீடு எடேல்
உன் தேவைக்கு மேல் வீட்டை பெரிதாக கட்டாதே.

19. இணக்கம் அறிந்து இணங்கு
ஒருவரிடம் நட்பு கொள்ளும் முன்,அவர் நல்ல குணங் களும்,நல்ல செய்கைகளும் கொண்டவரா எனத் தெரிந்த பிறகு அவருடன் நட்பு கொள்ளவும்.

20. தந்தை தாய்ப் பேண்
உன் தந்தையையும் தாயையும் அவர்களுடைய முதுமைக் காலம் வரை அன்புடன் காப்பாற்று.

21. நன்றி மறவேல்
ஒருவர் உனக்கு செய்த உதவியை ஒரு போதும் மறவாதே

22. பருவத்தே பயிர் செய்
எச்செயலையும் அதற்குரிய காலத்திலேயே செய்ய வேண்டும்.

23. மண் பறித்து உண்ணேல்
பிறர் நிலத்தை திருடி அதன் மூலம் வாழாதே (அல்லது) நீதி மன்றத்தில் இருந்து கொண்டே லஞ்சம் வாங்கிக்கொண்டு தீர்ப்பு வழங்காதே (என்றும் பொருள் கொள்ளலாம்)

24. இயல்பு அலாதன செய்யேல்
நல்லொழுக்கத்துக்கு மாறான செயல்களைச் செய்யாதே.

25. அரவம் ஆட்டேல்
பாம்புகளை பிடித்து விளையாடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இலவம் பஞ்சில் துயில்
'இலவம் பஞ்சு' எனும் ஒரு வகை பஞ்சினால் செய்யப்பட்ட படுக்கையிலே உறங்கு

27. வஞ்சகம் பேசேல்
கபடச்(உண்மைக்கு புறம்பான,கவர்ச்சிகரமான) சொற்களை பேசாதே

28. அழகு அலாதன செய்யேல்
இழிவான செயல்களை செய்யாதே

29. இளமையில் கல்
இளமை பருவத்தில் இருந்தே கற்கவேண்டியவைகளை (இலக்கணத்தையும், கணிதத்தையும்) தவறாமல் கற்றுக்கொள்.

30. அரனை மறவேல்
தருமத்தை எப்போதும் மறவாமல் செய்

31. அனந்தல் ஆடேல்
மிகுதியாக தூங்காதே

32. கடிவது மற
யாரையும் கோபத்தில் கடிந்து பேசிவிடாதே.

33. காப்பது விரதம்
தான் செய்யத் தொடங்கிய தருமத்தை விடாமல் செய்வதே விரதமாகும் (அல்லது)
பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் அவற்றைக் காப்பாற்றுவதே தவம் ஆகும்.

34. கிழமைப்பட வாழ்
உன் உடலாலும் பொருளாலும் பிறருக்கு நன்மை செய்து வாழ்.

35. கீழ்மை அகற்று
இழிவான குணஞ் செயல்களை நீக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. குணமது கைவிடேல்
நன்மை தரக்கூடிய நல்ல குணங்களை பின்பற்றுவதை நிறுத்தி விடாதே(கைவிடேல்).

37. கூடிப் பிரியேல்
நல்லவரோடு நட்பு செய்து பின் அவரை பிரியாதே.

38. கெடுப்பது ஒழி
பிறருக்கு கேடு விளைவிக்கும் செயல்களை செய்யாதே.

39. கேள்வி முயல்
கற்றவர் சொல்லும் நூற் பொருளை கேட்பதற்கு முயற்சிசெய்.

40. கைவினை கரவேல்
உங்களுக்கு தெரிந்த கைத்தொழிலை மற்றவர்களிடமிருந்து ஒளியாமற் செய்து கொண்டிருக்கவும்.

41. கொள்ளை விரும்பேல்
பிறர் பொருளை திருடுவதற்கு ஆசைப்படாதே.

42. கோதாட்டு ஒழி
குற்றமான விளையாட்டை விட்டு விடு (நீக்கு).

43. கௌவை அகற்று
வாழ்வில் செயற்கையாக ஏற்படும் துன்பத்தை நீக்கு.

44. சக்கர நெறி நில்
தர்மசக்கர நெறிப்படி வாழ வேண்டும். (அரசன் ஸ்ரீ ஆள்பவர், தலைவர்).

45. சான்றோர் இனத்து இரு
அறிவொழுக்கங்ளில் நிறைந்த பெரியோர்களுடன் சேர்ந்து இரு.

46. சித்திரம் பேசேல்
பொய்யான வார்த்தைகளை மெய் போலப் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. சீர்மை மறவேல்
புகழுக்குக் காரணமான நல்ல குணங்களை மறந்து விடாதே.

48. சுளிக்கச் சொல்லேல்
கேட்பவருக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகும் படி பேசாதீர்.

49. சூது விரும்பேல்
ஒருபொதும் சூதாட்டத்தை விரும்பாதே.

50. செய்வன திருந்தச் செய்
செய்யும் செயல்களை தவறோ குறையோ ஏதும் இல்லாமல் செய்யவும்.

51. சேரிடம் அறிந்து சேர்
நீ பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடையவர்களா என நன்கு ஆராய்ந்து பின்பு அவர்களுடன் பழகு.

52. சையெனத் திரியேல்
பெரியோர் 'சீ' என வெறுக்கும் படி வீணாய்த் திரியாதே.

53. சொற் சோர்வு படேல்
பிறருடன் பேசும் பொழுது மறந்தும் குற்றமுண்டாகப் பேசாதே.

54. சோம்பித் திரியேல்
முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே.

55. தக்கோன் எனத் திரி
பெரியோர்கள் உன்னைத் தக்கவன்(யோக்கியன்,நல்லவன்) என்று புகழும்படி நடந்துக்கொள்.

56. தானமது விரும்பு
யாசிப்பவர்களுக்கு தானம் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. திருமாலுக்கு அடிமை செய்
நாராயணமூர்த்திக்கு தொண்டு செய்.

58. தீவினை அகற்று
பாவச் செயல்களைச் செய்யாமல் இரு.

59. துன்பத்திற்கு இடம் கொடேல்
முயற்சி செய்யும் பொழுது வரும் உடம்பின் வருத்தத்திற்கு அஞ்சி அதனை விட்டு விடாதே.

60. தூக்கி வினை செய்
ஒரு வேலையை முடிப்பதற்கான வழிமுறைகளை நன்கு ஆராய்ந்து அறிந்து பின்பு அச்செயலை செய்யத் தொடங்கவும்.

61. தெய்வம் இகழேல்
கடவுளை பழிக்காதே.

62. தேசத்தோடு ஒட்டி வாழ்
உன் நாட்டில் வசிக்கும் மக்களுடன் பகை இல்லாமல் வாழ்.

63. தையல் சொல் கேளேல்
மனைவி சொல் கேட்டு ஆராயாமல் நடவாதே.

64. தொன்மை மறவேல்
பழமையாகிய நட்பினை மறந்துவிடாதே.

65. தோற்பன தொடரேல்
ஒரு செயலைச் செய்தால் தோல்வியில் தான் முடியும் எனத் தெரிந்தே அதை தொடங்காதே.

66. நன்மை கடைப்பிடி
நல்வினை செய்தலை எவ்வளவு இடையூறு வந்தாலும் உறுதியாகத் தொடரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. நாடு ஒப்பன செய்
நாட்டில் உள்ள பலரும் ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை செய்.

68. நிலையில் பிரியேல்
உன்னுடைய நல்ல நிலையில் இருந்து என்றும் தாழ்ந்து விடாதே.

69. நீர் விளையாடேல்
வெள்ளத்தில் நீந்தி விளையாடாதே.

70. நுண்மை நுகரேல்
நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே.

71. நூல் பல கல்
அறிவை வளர்க்கும் பல நூல்களைப் படி.

72. நெற்பயிர் விளைவு செய்
நெற்பயிரை விளையச் செய்வதை உன் வாழ்க்கை தொழிலாகக் கொண்டு வாழ்.

73. நேர்பட ஒழுகு
ஒழுக்கந் தவறாமல் நேர்வழியில் நட.

74. நைவினை நணுகேல்
பிறர் வருந்தத் தகுந்த தீ வினைகளைச் செய்யாதே.

75. நொய்ய உரையேல்
பயன் இல்லாத அற்ப வார்த்தைகளைப் பேசாதே.

76. நோய்க்கு இடம் கொடேல்
மிகுந்த உணவு உறக்கம் முதலியவற்றால் நோய்க்கு வழிவகை செய்யாதே.

77. பழிப்பன பகரேல்
பெரியோர்களால் பழிக்கப்படும் இழிவான சொற்களான பொய், கடுஞ்சொல் ஆகியவற்றைப் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. பாம்பொடு பழகேல்
பாம்புபோல கொடிய குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.

79. பிழைபடச் சொல்லேல்
குற்றம் உண்டாகும் படி எதையும் பேசாதே.

80. பீடு பெற நில்
பெறுமையை அடையும் படியான நல்ல நிலையிலே நில்.

81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
உன்னையே நம்பியவர்களை காப்பாற்றி வாழ்.

82. பூமி திருத்தி உண்
விளைநிலத்தை உழுது அதில் பயிர்செய்து உண்.(அ) விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்.

83. பெரியாரைத் துணைக் கொள்
அறிவிலே சிறந்த பெரியோர்களை உனக்குத் துணையாகப் பேணிக்கொள்.

84. பேதைமை அகற்று
அறியாமையைப் போக்கு.

85. பையலோடு இணங்கேல்
அறிவில்லாத சிறுவனோடு கூடித் திரியாதே.

86. பொருள்தனைப் போற்றி வாழ்
பொருள்களை(செல்வம் உட்பட)வீண் செலவு செய்யாமற் பாதுகாத்து வாழ்.

87. போர்த் தொழில் புரியேல்
யாருடனும் தேவையில்லாமல் சண்டை பொடுவதை ஒரு வேலையாகச் செய்யாதே.

88. மனம் தடுமாறேல்
எதனாலும் மனக்கலக்கம் அடையாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. மாற்றானுக்கு இடம் கொடேல்
பகைவன் உன்னை துன்புறுத்தி உன்னை வெல்வதற்க்கு இடம் கொடுக்காதே.

90. மிகைபடச் சொல்லேல்
சாதாரணமான விஷயத்தை மாயாஜால வார்த்தைகளால் பெரிதாகக் கூறாதே.

91. மீதூண் விரும்பேல்
மிகுதியாக உண்ணுதலை விரும்பாதே.

92. முனைமுகத்து நில்லேல்
எப்போதும் யாருடனாவது சண்டையிடுவதற்காக போர் முனையிலே நிற்காதே.

93. மூர்க்கரோடு இணங்கேல்
மூர்க்க குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.

94. மெல்லி நல்லாள் தோள்சேர்
பிற மாதரை விரும்பாமல் உன் மனைவியுடன் மட்டும் சேர்ந்து வாழ்.

95. மேன்மக்கள் சொல் கேள்
நல்லொழுக்கம் உடைய பெரியோர் சொல்லைக் கேட்டு நட.

96. மை விழியார் மனை அகல்
விலைமாந்தர் உடன் உறவு கொள்ளாமல் விலகி நில்.

97. மொழிவது அற மொழி
சொல்லப் படும் பொருளை சந்தேகம் நீங்கும் படி சொல்.

98. மோகத்தை முனி
நிலையில்லாத பொருள்களின் மேலுள்ள ஆசையை வெறுத்திடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99. வல்லமை பேசேல்
உன்னுடைய சாமர்த்தியத்தை நீயே புகழ்ந்து பேசாதே.

100. வாது முற்கூறேல்
பெரியோர்களிடத்தில் முறன் பட்டு வாதிடாதே.

101. வித்தை விரும்பு
கல்வியாகிய நற்பொருளை விரும்பு.

102. வீடு பெற நில்
முக்தியை பெறுவதற்கான சன்மார்கத்திலே வாழ்க்கையை நடத்து.

103. உத்தமனாய் இரு
உயர்ந்த குணங்கள் கொண்டவனாக வாழ்.

104. ஊருடன் கூடி வாழ்
ஊராருடன் நன்மை தீமைகளில் கலந்து வாழ்.

105. வெட்டெனப் பேசேல்
பிறர் புண்படும் வார்த்தைகளைப் பேசாதே.

106. வேண்டி வினை செயேல்
வேண்டுமென்றே தீய செயல்களைச் செய்யாதே.

107. வைகறைத் துயில் எழு
நாள்தோறும் சூரியன் உதிக்கும் முன்பே தூக்கத்தில் இருந்து எழுந்திரு.

108. ஒன்னாரைத் தேறேல்
பகைவர்களை நம்பாதே.

109. ஓரம் சொல்லேல்
எந்த வழக்கிலும் ஒருபுடைச் சார்பாக பேசாமல் நடு நிலையுடன் பேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

**கொன்றைப் பூமாலையை
அணிந்திருக்கும் சிவபெருமானின் செல்வனாகிய
விநாயகக் கடவுளை என்றும் போற்றி வணங்குவோம்**

*1.* *அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்*
*தாய், தந்தையர் கண்கண்ட தெய்வம்*

*2.* *ஆலயம் தொழுவது சாலவும் நன்று*
*கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுவது மிகவும் நல்லது*

*3.* *இல்லறமல்லது நல்லறமன்று*
*இல்லறவாழ்வே மிகவும் நன்மை பயக்கக் கூடியது*

*4.* *ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்*
*பிறருக்கு உதவி செய்யாதோர் பொருளைத் தீயவர் பறித்துக் கொள்வர்*

*5.* *உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு*
*குறைத்து உண்ணுதல் பெண்களுக்கு அழகு தரும்*

*6.* *ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்*
*ஊராரோடு பகைத்துக் கொண்டால் குடும்பம் அழிந்து விடும்*

*7.* *எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்*
*அறிவியலுக்கு ஆதாரமான எண்ணும், இலக்கிய அறிவுக்கு ஆதாரமான எழுத்தும் நமக்குக் கண் போன்றவை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஏவா மக்கள் மூவா மருந்து
செய் என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் அம்ருதம் போன்றவர்கள்

9. ஐயம் புகினும் செய்வன செய்
பிச்சை எடுத்தாவது செய்ய வேண்டிய நல்ல கார்யங்களை செய்

10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
ஒருவனை மணந்து புகுந்த வீட்டிலே வசிக்க வேண்டும்

11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
ஒழுக்கமானது வேதம் ஓதுவதை விட மிக நல்லது

12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
பொறாமைப் பேச்சு வளர்ச்சியை அழிக்கும்

13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு
சிக்கனமாயிருந்து தான்யத்தையும், செல்வத்தையும் தேட வேண்டும்.

14. கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை
கணவன் சொல்லுக்கு மாறாக நடவாதிருத்தலே கற்பு

15. காவல்தானே பாவையர்க்கு அழகு
காவல், கட்டுப்பாட்டோடு இருத்தலே பெண்களுக்கு அழகு

16. கிட்டாதாயின் வெட்டென மற
நமக்குக் கிடைக்காது என்ற ஒன்றை மறந்து விடு

17. கீழோராயினும் தாழ உரை
உன்னை விடத் தாழ்ந்தோராயினும் நயமாகப் பேசு

18. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை - பிறர் குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், சுற்றத்தார் என்று எவருமே இருக்க மாட்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்
பலவானாக இருந்தாலும், கர்வப் பேச்சு பேசாதே

20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
நமக்கு ஒருவர் கெடுதல் செய்தால், அதை அப்படியே விட்டு விடுதலே உயர்ந்த செயல்

21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
தாழ்வு வந்த போதும் மனந்தளராது இருப்பதே மீண்டும் எல்லாவற்றையும் சேர்க்கும்

22. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
கையில் இருக்கும் பொருளை விட உண்மையான செல்வம் கல்வியே ஆகும்

23. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி
தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது

24. கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கோள் மூட்டி கலகம் செய்வோர் காதில் கோள் சொல்வது காற்றுடன் கூடிய நெருப்பு போன்றது

25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
எவரையும் பழித்துக் கொண்டே இருந்தால், அனை வருக்கும் அவன் பகையாளி ஆவான்

26. சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை
மலடின்றி வாழ்தலே, குடும்பம் தழைப்பதற்கு அழகு

27. சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு
பெற்றோருக்குப் பெருமை, அவர் பிள்ளைகள் சான்றோர் எனப் பாராட்டப்படுவதே

28. சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு
தவத்திற்கு அழகு இறை நினைவோடு இருப்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சீரைத்தேடின் ஏரைத் தேடு
புகழோடு வாழ விரும்பினால், பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டும்

30. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
எந்த நிலையிலும் கூடி இருத்தலே சுற்றத்திற்கு அழகு.

31. சூதும் வாதும் வேதனை செய்யும்
சூதாட்டமும், தேவையில்லாத விவாதமும் துன்பத்தையே தரும்

32. செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்
தவம் செய்வதை விட்டு விட்டால் அறியாமை (கைதவம்) ஆட்கொண்டு விடும்

33. சேமம் புகினும் யாமத்து உறங்கு
காவல் வேலைக்கு சென்றாலும் நள்ளிரவில் உறங்க வேண்டும்

34. சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்
பொருள் கொடுக்குமளவு இருந்தால், பிறருக்கு உணவிட்டு உண்ண வேண்டும்

35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்
பொருளுள்ளவர், மீதமுள்ள அறம், இன்பம், வீட்டை பெறுவர்.

36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்
சோம்பெறிகள் வறுமையில் வாடித் திரிவர்

37. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
தந்தை சொல்லெ உயர்ந்த மந்திரம் போலாகும்

38. தாயிற் சிறந்த ஒரு கோயிலு மில்லை
தாயே சிறந்த தெய்வமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
கடல் கடந்தாவது பொருள் தேட வேண்டும்

40. தீராக் கோபம் போராய் முடியும்
கோபம் சீக்கிரமாகப் போய் விட வேண்டும். இல்லையேல் அது சண்டையில் போய் முடியும்

41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
கணவனுக்குத் துன்பம் வந்த போது, கவலைப் படாத பெண்கள், மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டதற்கு ஒப்பாவர்.

42. தூற்றம் பெண்டிர் கூற்றெனத் தகும்
எப்போதும் அவதூறுக் கூறிக் கொண்டே இருக்கும் பெண்கள் குடும்பத்திற்கு எமன் போன்றவர்.

43. தெய்வம் சீறின் கைதவம் மாளும்
தெய்வம் கோபித்துக் கொண்டால், நம் தவமும் அழிந்து போம்.

44. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
பொருளைத் தேடிச் சேர்க்காது, இருப்பதை செலவிட்டுக் கொண்டிருந்தால் துன்பத்தில் முடியும்

45. தையும் மாசியும் வையகத்து உறங்கு
தை, மாசி (வெயில் காலம்) மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கு

46. தொழுது ஊண் சுவையின் உழுது ஊன் இனிது
பிறரிடம் வணங்கி அந்த ஊதியத்தில் உண்பதை விட பயிர் செய்து உண்பதே இனிது.

47. தோழனோடும் ஏழைமை பேசேல்
நெருங்கிய நண்பனிடத்தும் நம் வறுமை பற்றிப் பேசக் கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. நல்இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்
நல்லோர் நட்பு இல்லையேல், அல்லல் படுவோம்

49. நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை
நாடு செழித்திருக்குமானால் எவருக்கும் இன்பமே.

50. நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை
சொன்ன சொல் தவறாது இருத்தலே, நிலையான கல்வி கற்றதற்கு அழகு

51. நீர்அகம் பொருந்திய ஊர்அகத்திரு
நீர் நிறைந்த ஊரில் வசிக்க வேண்டும்

52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
சிறிய கார்யமாக இருந்தாலும், யோசித்து செயல் பட வேண்டும்

53. நூன் முறை தெரிந்து சீலத் தொழுகு
நல்ல நூல்களைப் பயின்று, ஒழுக்கத்தோடு நடந்து கொள்

54. நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை
நமக்குத் தெரியாமல் ஒருவருக்கு வஞ்சனை செய்ய முடியாது.

55. நேரா நோன்பு சீர் ஆகாது
மனம் ஒப்பி செய்யாத எந்த விரதமும் சிறப்பாக முடியாது

56. நைபவர் எனினும் நொய்ய உரையேல்
சக்தியற்றவர் இடத்தும் மனம் நோகுமாறு பேசக்கூடாது

57. நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்
சிறியவர்களும் செய்யும் கார்யத்தால் சிறந்தவர் ஆவர்

58. நோன்பு என்பது கொன்று தின்னாமை
உயிரைக் கொன்று அதை உண்ணாமல் இருப்பதே விரதமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
ஒருவர் புண்ணியம் அவர் அடைந்த விளைச்சலில் தெரியும்

60. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்
சிறந்த உணவாக இருந்தாலும், காலமறிந்து உண்ண வேண்டும்

61. பிறன்மனை புகாமை அறம் எனத்தகும்
அடுத்தவன் மனைவியை விரும்பாததே சிறந்த அறம்

62. பீரம் பேணில் பாரம் தாங்கும்
தாய்ப்பாலை ஊட்டி வளர்த்தால், அந்தக் குழந்தை பலம் பெறும், நிர்வாக சுமைகளைத் தாங்கும்

63. புலையும், கொலையும் களவும் தவிர்
புலாலுண்ணுதல், கொலை, திருடு இம்மூன்றையும் செய்யாதே

64. பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்
கொடியவர்களிடம் சிறந்த ஒழுக்கங்கள் இருக்காது

65. பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்
ஞானம் பெற்றோர்க்கு சுற்றம் என்ற பந்தமும், கோபமும் கிடையாது

66. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்
அறியாதவர் போன்று இருப்பது பெண்களுக்கு அணிகலன்

67. பையச் சென்றால் வையந் தாங்கும்
நிதானமாகச் செய்யும் கார்யங்களில் வெற்றி நிச்சயம்

68. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
அனைத்துத் தீங்குகளையும் விட்டு விடு

69. போனகம் என்பது தானுழுது உண்ணல்
தான் முயன்று உழைத்து சம்பாதித்ததே உணவு என்பதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
தேவாம்ருதமே கிடைத்தாலும், பிறரோடு சேர்ந்து உண்

71. மாரி அல்லது காரியம் இல்லை
மழையின்றி ஒன்றும் இல்லை

72. மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை
மழை வரப்போவதற்கு அறிகுறியே மின்னல்

73. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
மாலுமி இல்லாத ஓடம் செல்லாது

74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
பிறருக்கு செய்யும் நன்மை, தீமைகள் பின்பு நமக்கே வரும்

75. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
முதியோர்கள் அறிவுரை அமிர்தம் போன்றது

76. மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
மெத்தையில் படுத்து உறங்குதலே தூக்கத்திற்கு சுகம்

77. மேழிச் செல்வம் கோழைப் படாது
கலப்பையால் உழைத்துச் சேர்த்த செல்வம் ஒரு போதும் வீண் போகாது

78. மைவிழியார் தம் மனைஅகன்று ஒழுகு
விலை மாதர் இல்லங்களிலிருந்து ஒதுங்கி இரு

79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
பெரியோர் சொல்லை கேளாமல் மறுத்தால் அந்த காரியங்கள் கெட்டுவிடும்

80. மோனம் என்பது ஞான வரம்பு
மௌனமே மெய்ஞ்ஞானத்தின் எல்லை

81. வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண்
சோழ வளவனை ஒத்த செல்வம் படைத்திருந்தாலும், வரவு அறிந்து செலவு செய்து உண்ண வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
மழை குறைந்து விடுமானால் பல தான தர்மங்கள் குறைந்து விடும்

83. விருந்தில்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்
விருந்தினரை உபசரித்தறியாத இல்லத்தில் தேவையான ஒழுக்கம் இருக்காது

84. வீரன் கேண்மை கூர் அம்பாகும்
வீரனுடன் கூடிய நட்பு, கையில் கூர்மையான அம்பை வைத்திருப்பதற்கு ஒப்பாகும்

85. உரவோர் என்கை இரவாது இருத்தல்
யாசிக்காமல் இருப்பதே வல்லவர்க்கு இலக்கணம்

86. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு
உற்சாகமான முயற்சியோடு இருப்பதே முன்னேற்றத்திற்கு அழகு

87. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை
தூய்மையான மனமுள்ளோருக்கு, வஞ்சக எண்ணம் இல்லை

88. வேந்தன் சீறின் ஆம்துணை இல்லை
அரசின் கோபத்துக்கு ஆளானவருக்கு வேறு துணை இல்லை

89. வைகல் தோறும் தெய்வம் தொழு
தினமும் காலையில் தெய்வத்தை வணங்கு

90. ஒத்த இடத்து நித்திரை கொள்
பழக்கப்பட்ட, சமமான இடத்தில் படுத்து உறங்கு

91. ஓதாதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்
படிக்காதவர்களிடம் மனமறிந்த ஒழுக்கம் இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதுரை

## கடவுள் வாழ்த்து

*வாக்கு உண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்*
*நோக்கு உண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு*
*துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்*
*தப்பாமல் சார்வார் தமக்கு*

**பூக்களைக் கொண்டு சிவந்த மேனியுடைய விநாயகரது பாதங்களைத் துதிப்பவர்க்கு வாக்குத் திறமையும், நல்ல மனமும், பெருமலரை உடைய லக்ஷ்மியின் கடாக்ஷமும், நோயற்ற வாழ்வும் கிடைக்கும்**

## வெண்பா : 1

*நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி*
*'என்று தருங்கொல்?' எனவேண்டாம் - நின்று*
*தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்*
*தலையாலே தான்தருத லால்.*

**ஒருவர்க்கு உதவி செய்யும்போது, அதற்கு ப்ரதியுபகாரமும், நன்றியும் எப்போது கிடைக்கும் என்று கருதி செய்யக்கூடாது. எப்படிப்பட்ட நீரை வேர் மூலம் உண்டாலும், நன்கு தளராது வளர்ந்துள்ள தென்னை மரம் அந்நீரை சுவையான இளநீராக தந்து விடும். அதுபோல ஒருவர்க்கு செய்த சிறு உதவியும் பெரிய விதத்தில் நமக்கு ஒரு காலம் நிச்சயம் நன்மை பயக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 2

*நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்*
*கல்மேல் எழுத்துப்போல் காணுமே -அல்லாத*
*ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்*
*நீர் மேல் எழுத்துக்கு நேர்.*

நல்லவர்களுக்கு செய்யும் உதவி, கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவது போன்றது. அது எவரும் அறியும் வண்ணம் என்றும் நிலைத்திருக்கும். அப்படியல்லாது இரக்கமற்றவர்களுக்கு செய்யும் உதவி எவர்க்கும் பயன்தராது. அது நீரின் மேல் எழுதும் எழுத்துக்களைப் போன்று பயனின்றி நிலைக்காது போகும்

## வெண்பா : 3

*இன்னா இளமை வறுமைவந் தெய்தியக்கால்*
*இன்னா அளவில் இனியவும்-இன்னாத*
*நாளல்லா நாள்பூந்த நன்மலரும் போலுமே*
*ஆளில்லா மங்கைக் கழகு.*

இளமையில் வறுமையும், இயலாத முதுமையில் செல்வமும் பெற்றால் அதனால் துன்பமே. அனுபவிக்க முடியாது. அது பருவமில்லாத காலங்களில் பூக்கும் பூக்களைப் போன்றது. அதைப் போல் துணைவனில்லாத பெண்களின் அழகும் வீணே

## வெண்பா : 4

*அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளாய்*
*நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்*
*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்.*

நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு.

## வெண்பா : 5

*அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி*
*எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த*
*உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்*
*பருவத்தால் அன்றிப் பழா.*

கிளைகளோடு கூடிய நீண்ட மரங்களும் பருவத்தில் மட்டும் பழங்களைத் தரும். அது போல மேன்மேலும் முயன்றாலும் நாம் செய்யும் கார்யங்கள் தகுந்த காலம் கூடினால் மட்டுமே பயன் தரும்.

## வெண்பா : 6

*உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்*
*பற்றலரைக் கண்டால் பணிவரோ? கல் தூண்*
*பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்*
*தளர்ந்து வளையுமோ தான்*

தூண் ஓரளவுக்கு மேல் பாரத்தை ஏற்றினால் உடைந்து விழுந்து விடுமேயல்லாது, வளைந்து போகாது. அதுபோலவே மானக்குறைவு ஏற்பட்டால் உயிரை விட்டு விடும் தன்மையுள்ளவர்கள் எதிரிகளைக் கண்டால் பணிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 7

*நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான் கற்ற*
*நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்*
*தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்*
*குலத்து அளவே ஆகும் குணம்*

அல்லிப்பூ நீரின் அளவு எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவே வளரும். நாம் கற்ற நூல்களின் அளவே நம் அறிவு. முற்பிறப்பில் செய்த புண்ய கார்யங்களின் அளவே நாம் இப்போது அனுபவிக்கும் செல்வம். குணம் நாம் தோன்றிய குலத்தின் அளவே.

## வெண்பா : 8

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம் மிக்க*
*நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று*

நல்லவர்களைக் காண்பதும், நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்கள் குணங்களை மற்றவரிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நல்லது.

## வெண்பா : 9

*தீயாரைக் காண்பதுவும் தீதே திரு அற்ற*
*தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்*
*குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு இணங்கி இருப்பதுவும் தீது*

தீயவர்களைப் பார்ப்பதும், பயனற்ற அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்களைப் பற்றி அடுத்தவர்களிடத்தில் சொல்வதுவும், அவர் களோடு சேர்ந்து இருப்பதுவும் நமக்குக் கெடுதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 10

*நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்*
*புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்*
*நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு*
*எல்லார்க்கும் பெய்யும் மழை*

உழவன் நெல்லுக்குப் பாய்ச்சும் நீர் அங்கிருக்கும் புல்லுக்கும் பயனைத் தரும். அது போலவே இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர்க்காகப் பெய்யும் மழை (பலன்கள்) எல்லாருக்குமே பயனைத் தரும்

## வெண்பா : 11

*பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்*
*விண்டு உமி போனால் முளையாதாம் கொண்ட பேர்*
*ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி*
*ஏற்றம் கருமம் செயல்*

நமக்குப் பயன் தருவது கடைசியில் அரிசியே ஆனாலும், அது உமி இன்றி முளைப்பதில்லை. அது போலவே பேராற்றல் உடையவர்கள் செய்யும் செயலும் அடுத்தவர் துணையின்றி முடிவதில்லை

## வெண்பா : 12

*மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்*
*உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல் பெரிது*
*மண்ணீரும் ஆகாது அதன் அருகே சிற்றூறல் உண்ணீரும்*
*ஆகிவிடும்*

தாழம்பூவின் மடல் பெரிதாக இருந்தாலும் வாசம் தருவதில்லை. ஆனால் அதனின் சிறிய மகிழம்பூவோ நல்ல வாசனையைத் தருகிறது. பெருங்கடலின் நீர் துணி தோய்க்கக் கூட உதவுவதில்லை, ஆனால் அதனருகிலேயே தோன்றும் சிறு ஊற்று குடிப்பதற்கும் நல்ல நீரைத் தருகிறது. எனவே உருவத்தை வைத்து ஒருவரை எடை போடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 13

*கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்*
*அவையல்ல நல்லமரங்கள் - சபை நடுவே*
*நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய*
*மாட்டாதவன் நன் மரம்*

கிளைகளோடும், கொம்புகளோடும் காட்டில் நிற்பவை மரங்கள் அல்ல. சபையின் நடுவே ஒருவர் தரும் ஓலையில் எழுதியிருப்பதைப் படிக்கத் தெரியாதவனும், அடுத்தவர் மனதை அறியாதவனுமே மரம் போன்றவன்

## வெண்பா : 14

*கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி*
*தானும் அதுவாக பாவித்துத் - தானும் தன்*
*பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலும்*
*கல்லாதான் கற்ற கவி*

காட்டில் மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி உடனே தன்னையும் அதைப் போலவே நினைத்து தன்னுடைய அழகில்லாத சிறகை விரித்து ஆடுவதை போன்றதே, கல்வி கற்காதவன் சொல்லும் கவி தையும், அதனால் ஒரு பயனும் இல்லை. விஷயமும் இல்லை.

## வெண்பா : 15

*வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி*
*ஆங்கு அதனுக்க ஆகாரம் ஆனாற்போல பாங்கு அறியா*
*புல் அறிவாளர்க்குச் செய்த உபகாரம்*
*கல்லின் மேல் இட்ட கலம்*

புலிக்கு நோயைக் குணமாக்கிய விஷத்தைப் போக்கும் வைத்யன் உடனே அதற்கே உணவாவது நிச்சயம், அதைப் போன்றதே நன்றி அறியாத அற்பர்களுக்கு நாம் செய்யும் உதவியும். கல்லின் மேல் எறியப்பட்ட பானையைப் போல அந்த உதவியும் நம்மையே உடன் அழித்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 16

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

**நீர் பாயும் தலை மடையில் பல சிறு மீன்கள் ஓடிக் கொண்டிருந்தாலும், கொக்கு வாடியிருப்பதைப் போலக் காத்துக் கொண்டிருக்கும். எது வரை? தனக்குரிய பெரிய மீன் வரும் வரை. அதைப் போலவே அறிஞர்களின் அடக்கமும். அதைக் கண்டு அவர்களை அலக்ஷ்யம் செய்து வென்று விட நினைக்கக்கூடாது**

## வெண்பா : 17

*அற்ற குளத்தில் அறு நீர்ப்பறவை போல்*
*உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் அக்குளத்தில்*
*கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே*
*ஒட்டி உறுவார் உறவு*

குளத்தில் நீர் வற்றிய உடன் விலகிச் செல்லும் பறவைகள் போல, நமக்குத் துன்பம் வந்தபோது நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர் அல்லர். அந்தக் குளத்திலேயே அப்போதும் சேர்ந்து வாடும் கொட்டி, அல்லி, நெய்தல் கொடிகளைப் போல, நம்முடனேயே நம் துன்பங்களையும் பகிர்ந்து கொள்பவர்களே நம் உறவு.

## வெண்பா : 18

*சீரியர் கெட்டாலும் சீரியரே, சீரியர் மற்(று)*
*அல்லாதார் கெட்டால் அங் கென்னாகும்? - சீரிய*
*பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும் என்னாகும்*
*மண்ணின் குடம் உடைந்தக் கால்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்தால் ஆன பானை உடைந்து சிதறினால், அதன் சிதறலும் தங்கமே. ஆனால் மண்பானை உடைந்து போனால்? அதைப் போன்றதே சிறந்த பண்புடையவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உண்டாகும் தாழ்வும்.

## வெண்பா : 19

*ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்*
*நாழி முகவாது நானாழி - தோழி*
*நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்*
*விதியின் பயனே பயன்.*

தோழி! எவ்வளவு தான் அமுக்கி, பெரும் கடலிலே முகந்தாலும், ஒரு நாழி (படி) அளவுள்ள பாத்ரம் நான்கு படி நீரை முகவாது. நல்ல கணவனும், செல்வமும் நிறைந்திருந்தும் நமக்குக் கிடைக்கும் சுகத்தின் அளவும் அதைப் போன்றதே. அது நம் முன் ஜன்ம நல் வினைகளின் அளவைப் பொறுத்தது.

## வெண்பா : 20

*உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா*
*உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா*
*மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்*
*அம்மருந்து போல்வாரும் உண்டு.*

வ்யாதி நம்முடனேயே பிறந்து நம்மைக் கொன்று விடுகிறது. எனவே உடன் பிறந்தோர் எல்லாரையும் நம் உறவு என்று நினைக்க முடியாது. உடன் பிறக்காது எங்கோ பெரிய மலையில் இருக்கும் மருந்து நம் வ்யாதியைத் தீர்ப்பது போல, அன்னியரும் நமக்கு நன்மை தருபவராக இருக்கக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 21

*இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை*
*இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்*
*வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்*
*புலி கிடந்த தூறாய் விடும்.*

நல்ல மனைவி மட்டும் அமைந்து விட்டால் அந்த இல்லத்தில் இல்லாதது என்று எதுவுமே இல்லை. ஆனால் அந்த இல்லாள் (மனைவி) குணமில்லாதவளாக (இல்லாள்) இருந்து விட்டாலோ, கடுமையான எதிர் வார்த்தைகள் பேசி விட்டாலோ அந்த இல்லம் புலியின் குகை போலாகி விடும்.

## வெண்பா : 22

*எழுதியவா றேகாண் இரங்கு மடநெஞ்சே*
*கருதியவா றாமோ கருமம் - கருதிப்போய்க்*
*கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்*
*முற்பவத்தில் செய்த வினை.*

மட நெஞ்சே! திட்டத்தோடு கற்பக மரத்திடம் சென்றாலும், எட்டிக்காயே கிடைத்ததென்றால் அது நம் முன் வினைப் பயனே. விதியில் எழுதியுள்ளபடிதான் நமக்குக் கிடைக்குமே அல்லாது நாம் நினைப்பதெல்லாமா நடந்து விடும்?

## வெண்பா : 23

*கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடும் சினத்துப்*
*பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - வில்பிடித்து*
*நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே*
*சீர் ஒழுகு சான்றோர் சினம்*

சிறு வேறுபாடு வந்தாலே தாழ்ந்தோர் பிளந்து போட்ட கல்லைப் போலப் பிரிந்து விடுவர். பெரும் சினத்தால் பிரிந்தாலும் பெரியோர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளந்த தங்கத்தைப் போல மீண்டும் சேர்ந்து விடுவர். அவர்கள் கே-ாபம், ஒருவர் எய்த அம்பால் நீரில் உண்டான வடுவைப் போன்றதே

## வெண்பா : 24

*நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்தாற்போல்*
*கற்றாரைக் கற்றாறே காமுறுவர் - கற்பிலா*
*மூர்க்கரை மூர்க்கரே முகப்பர் முதுகாட்டில்*
*காக்கை உகக்கும் பிணம்.*

குளத்தில் பூத்திருக்கும் தாமரையை அன்னப்பறவை சேர்ந்தது போல கற்றவர்களைக் கற்றவர்களே விரும்பிச் சேர்வர். சுடுகாட்டில் பிணத்தைக் காக்கைச் சேர்வது போல, கல்வி அறிவில்லாத மூடரை, மூடர்களே சேர்வர்

## வெண்பா : 25

*நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்*
*அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்*
*கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்*
*கரவிலா நெஞ்சத் தவர்.*

தன்னிடம் விஷமிருப்பதை அறிந்து நாகப்பாம்பு மறைந்து வாழும். விஷமில்லாத தண்ணீர்ப் பாம்போ பயமில்லாது எங்கும் வெளியில் திரிந்து கொண்டிருக்கும். அதைப் போலவே நெஞ்சில் குற்றம் உடையவர்களும் அதை மறைத்தே வாழ்ந்து கொண்டிருப்பர். குற்றமில்லாதவர்களோ கபடமின்றி வெளியில் திரிந்து கொண்டிருப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 26

*மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்*
*மன்னனில் கற்றோன் சிறப்புடையன் மன்னர்க்குத்*
*தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோற்குச்*
*சென்றஇடம் எல்லாம் சிறப்பு.*

ஒப்பிட்டு பார்க்கும் போது, அரசனை விட, கசடறக் கற்றவனே மேலானவன். ஏனென்றால், அரசனுக்கு அவன் தேசத்தைத் தவிர வேறெங்கும் சிறப்பு இல்லை. ஆனால் கற்றவனுக்கோ அவன் செல்லுமிடமில்லாம் சிறப்பு.

## வெண்பா : 27

*கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்*
*அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய*
*வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே*
*இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்*

கற்றறிந்தவர் வார்த்தை கற்காதவர்களுக்கு துன்பத்தைத் தரும். தர்மம் தீயவர்களைத் அழிக்கும், மெல்லிய வாழைக்கு அதன் கன்று அழிவைத் தரும். வாழ்க்கைக்குப் பொருந்தி நடக்காத மனைவி அந்த வீட்டிற்கு அழிவைத் தருவாள்.

## வெண்பா : 28

*சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்*
*கந்தம் குறைபடா தாதலால் - தம்தம்*
*தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்*
*மனம்சிறியர் ஆவரோ மற்று.*

தேய்ந்து மெலிந்திருந்தாலும் சந்தனம் மணம் குறைவதில்லை. அதைப் போலவே தாராள குணம் படைத்த அரசர்களும் தன் பொக்கிஷம் குறைந்த காலத்தும் மனம் மாறுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா : 29

மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல
உருவும் உயர் குலமும் எல்லாம் - திரு மடந்தை
ஆம் போது அவளோடும் ஆகும் அவள் பிரிந்து
போம் போது அவளோடும் போம்

ஒருவனைச் சூழ்ந்து வாழும் இனிய சுற்றமும், அவனுடைய பெரும் செல்வமும், அவன் அழகும், அவன் குலப் பெருமையும் லக்ஷ்மி கடாக்ஷம் ஒருவனுக்கு இருக்கும் வரையில் தான். அவள் அகலும் போது இவையனைத்தும் போய் விடும்

## வெண்பா : 30

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

தன்னை வெட்டுபவனுக்கும் நிழலைத் தந்து காக்கும் மரத்தைப் போல, அறிவுடையார் அவர்தம் உயிருக்கே தீங்கு செய்பவனையும் இயன்ற வரைக் காக்கவே செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்

நவீன போக்குவரத்து வசதிகள் கூடிய காலகட்டம் இது. நாளாந்தம் நாட்டின் பல பாகங்களிலும் பல வீதி விபத்துக்கள் ஏற்படுவதை அறிந்துகொண்டிருக்கின்றோம். இதனால் உயிரிழப்பு, அங்கவீனம், பொருட்சேதம் மட்டுமன்றி மன உளைச்சலம் ஏற்படுகின்றது. இந்நிலை மாறவேண்டுமாயின் வீதியில் பயணிப்போர் அனைவரும் அவதானத்துடன் செயற்படுவது அவசியமாகும்.

## வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் வழிமுறைகள்

### பாதையில் நடந்து செல்வோர் (பாதசாரிகள்) பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள்

1. எப்போதும் பாதையின் வலதுபுறமாகவே நடந்து செல்ல வேண்டும்.
2. ஒருவர் பின் ஒருவராக நடந்து செல்லவேண்டும்.
3. பாதையைக் கண்ட கண்ட இடங்களில் கடப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.
4. வீதிசமிக்ஞை, கைச் சமிக்ஞை போன்றவற்றை அவதானித்து நடத்தல் வேண்டும்.

## பாதசாரிகள் பாதையைக் கடக்கும் விதம்

1. மஞ்சட் கடவையுள்ள இடங்களில் மஞ்சட் கடவையினூடாக பாதையைக் கடவுங்கள்

2. முதலில் வலப்புறமாகவும் பின்னர் இடப்புறமாகவும் பார்த்து மீண்டும் வலப்புறமாகப் பார்த்து வாகனம் இல்லாத சந்தர்ப்பத்தில் விரைவாகப் பாதையைக் கடக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மஞ்சட் கடவையிலும் கட்டாயமாக இது பின்பற்றப்பட வேண்டும்.

4. பெலிகன் கடவையில் பச்சை மனிதன் எரியும்போது மட்டும் பாதையைக் கடவுங்கள்.

5. நிறுத்தப்பட்டிருக்கும் வாகனமொன்றின் பின்னாலோ, முன்னாலோ வீதியைக் கடக்காதீர்.

## வாகனம் ஓட்டுபவர்களின் (சாரதிகளின்) கவனத்திற்கு

உங்கள் வாகனத்தில் பயணம் செய்யும் அத்தனை பயணிகளின் உயிர்களும் உங்கள் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே அவர்களைச் செல்லவேண்டிய இடத்திற்கு பாதுகாப்பாகக் கொண்டு சென்று சேர்ப்பது உங்கள் கடமையாகும். எனவே வாகனமோட்டிகளே அவதானமாகச் செயற்படுங்கள்.

- **மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டாதீர்கள்.**
- **தூக்கக் கலக்கத்துடன் வாகனம் ஓட்டாதீர்கள்**

மிக முக்கியமாக தூக்கக் கலக்கத்துடன் வாகனம் ஓட்டாதீர்கள். அது குடிபோதையிலும் அபாயகரமானது. நீங்கள் தூக்கத்தில் ஒரு கணம் கண்ணை மூடினாலும் பெரிய விபத்து ஏற்படச் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும். எனவே தூக்கம் வரும் பட்சத்தில் சிறிது தூரம் தானே போய்விடலாம் என்று நினைக்காமல் வாகனத்தை ஓரமாக நிறுத்தி சிறிது நேரம் தூங்கியபின் வாகனத்தை ஓட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **நீங்களும் வாகனத்தில் பயணிப்போரும் பாதுகாப்புப் பட்டி (பெல்ற்) அணிந்துள்ளீர்களா என்பதை உறுதி செய்யுங்கள்.**
- **வீதி விதிகளை அனுசரியுங்கள்**
- **வேகக் கட்டுப்பாட்டை அனுசரியுங்கள்**
- **அதி வேகமாக வாகனம் ஓட்டாதீர்கள்!**

## வாகனத்தில் பயணிப்போரின் கவனத்திற்கு

- உங்கள் வாகனப் பாதுகாப்பு பட்டிகளை அணிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் வாகனமோட்டி பாதுகாப்பாக வாகனம் ஓட்டக்கூடிய மனநிலையில் உள்ளாரா? என்பதை அவதானியுங்கள்.
- குடிபோதையில் வாகமோட்ட அனுமதிக்காதீர்கள்.
- தூக்கக் கலக்கத்துடன் வாகனமோட்ட அனுமதிக்காதீர்கள்.
- சாரதியை உற்சாகமாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.
- சாரதிக்கு தூக்கம் வருகிறது எனக் கண்டால் வாகனத்தை நிறுத்தி , சிறிதுநேரம் தூங்கச் செய்யுங்கள்.
- வாகனத்தை வேகமாக ஓட்ட அனுமதிக்காதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக நாடுகளின் தேசிய சின்னங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அமெரிக்கா | - | தங்கத்தடி |
| 2. | அவுஸ்ரேலியா | - | கங்காரு |
| 3. | அயர்லாந்து | - | ஹறப்ரக் மலர் |
| 4. | இந்தியா | - | சிங்கத்தின் தலை |
| 5. | இலங்கை | - | வாளுடன் சிங்கம் |
| 6. | ஈரான் | - | ரோஜா மலர் |
| 7. | ஈராக் | - | சிவப்பு ரோஜா |
| 8. | எகிப்து | - | தாமரைப்பூ |
| 9. | கனடா | - | வெள்ளைமலர் (அல்லி) |
| 10. | சீனா | - | திராட்சைமலர் |
| 11. | சுவிற்சலாந்து | - | இடல்விஸ் மலர் |
| 12. | பாகிஸ்தான் | - | பிறை |
| 13. | பெல்ஜியம் | - | அசலியா மலர் |
| 14. | போலந்து | - | சோலி மலர் |
| 15. | பிரான்ஸ் | - | அல்லி மலர் |
| 16. | பிரித்தானியா | - | ரோஜாமலர் |
| 17. | யப்பான் | - | கூட்டுப்புழுக் கூடு |
| 18. | ருமேனியா | - | பூவரசம்பூ |
| 19. | ஜேர்மனி | - | கான் பூ |
| 20. | டென்மார்க் | - | கடற்கரைச் செடி |

## நாடுகளின் பண்டைய பெயர்கள்

| தற்போதுள்ள பெயர் | | பண்டைய பெயர் |
|---|---|---|
| மியான்மார் | - | பர்மா |
| சிம்பாவே | - | ரொடீசியா |
| ஈரான் | - | பாரசீகம் |
| ஸைரே | - | கொங்கோ |
| எதியோப்பியா | - | அபிசீனியா |
| ஈராக் | - | மெசப்பெத்தேமியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நெதர்லாந்து | - | ஒல்லாந்து, கொலன்ட் |
| நாடுகள் | | தேசியப் பறவைகள் |
| இலங்கை | - | காட்டுக்கோழி |
| இந்தியா | - | ஆண்மயில் |
| பிரிட்டன் | - | ராபின் |
| அமெரிக்கா | - | கழுகு |
| கனடா | - | வாத்து |
| தென்னமெரிக்கா | - | நீலக்கொக்கு |
| ஜேர்மனி | - | வெள்ளைக் கொக்கு |
| டென்மார்க் | - | வானம்பாடி |
| ஹவாய் | - | குள்ளவாத்து |
| அவுஸ்ரேலியா | - | சவாலோ பறவை |

| **நூல்கள்** | | **ஆசிரியர்கள்** |
|---|---|---|
| இராமாயணம் (வடமொழி) | - | வான்மீகி |
| இராமாயணம் (தமிழ்மொழி) | - | கம்பர் |
| மகாபாரதம் (வடமொழி) | - | வியாசர் |
| மகாபாரம் (தமிழ்மொழி) | - | வில்லிபுத்தூரர் |
| நளவெண்பா | - | புகழேந்தி |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோ அடிகள் |
| மணிமேகலை | - | சீத்தலைச் சாத்தனார் |
| வளையாபதி | - | பரிமேழளகர் |
| குண்டலகேசி | - | நாககுத்தர் |
| சீவகசிந்தாமணி | - | திருத்தக்கதேவர் |
| நல்வழி, ஆத்திசூடி | - | ஔவையார் |
| நற்சிந்தனை | - | யோகர் சுவாமி |
| யாழ்நூல் | - | சுவாமி விபுலானந்தர் |
| சத்தியசோதனை | - | மகாத்மாகாந்தி |
| பாஞ்சாலி சபதம் | - | சுப்பிரமணியபாரதியார் |
| கீதாஞ்சலி | - | ரவீந்திரநாத் தாகூர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவு கொண்டாடப்படும் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | - | காகிதம்/கான் | 14 | - | தந்தம் |
| 2 | - | பருத்தி | 15 | - | பளிங்கு |
| 3 | - | தோல் | 20 | - | பீங்கான் |
| 4 | - | புத்தகம் | 25 | - | வெள்ளி |
| 5 | - | இரும்பு | 30 | - | முத்து |
| 6 | - | மரம் | 40 | - | செம்பு |
| 7 | - | வெண்கலம் | 45 | - | நீலக்கல் |
| 8 | - | மண்பானை | 50 | - | பொன் |
| 10 | - | தகரம் | 60 | - | மணி/வைரம் |
| 11 | - | எஃகு | 75 | - | பவளம் |
| 12 | - | தோல் | 100 | - | நூற்றாண்டு |
| 13 | - | சரிகை | | | |

| உலகக் குறியீடுகள் | | விளக்கம் |
|---|---|---|
| ஒலிவ் இலைகள் | - | சமாதானம் |
| வெண்புறா | - | அமைதி |
| சிகப்புச்சக்கரம் | - | வளர்ச்சி |
| மஞ்சள்கொடி | - | தொற்றுநோய் |
| கறுப்புத்துணிப் பட்டி | - | துக்கம் |
| செஞ்சிலுவை | - | மருத்துவ உதவி |
| அரைக்கம்பத்தில் கொடி | - | துக்கம் |
| சிகப்பு முக்கோணம் | - | குடும்பக் கட்டுப்பாடு |
| சிவப்பு விளக்கு கொடி | - | ஆபத்து |
| கண்கள் கட்டி நின்ற நிலையில் கையில் தராசு வைத்திருக்கும் பெண் | - | நீதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 26 | - | உலக சுங்கத்துறை நாள் |
| பெப்ரவரி 25 | - | உலக காச நோய் தடுப்பு தினம் |
| மார்ச் 8 | - | உலக மகளிர் தினம் |
| மார்ச் 15 | - | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் 21 | - | உலக வனதினம், உலக இன-பேத ஒழிப்பு நாள் |
| மார்ச் 22 | - | உலக நீர் தினம் |
| மார்ச் 23 | - | உலக வானிலை நாள் |
| ஏப்ரல் 7 | - | உலக நலவாழ்வு தினம் |
| ஏப்ரல் 18 | - | உலக மரபுரிமை தினம் |
| ஏப்ரல் 22 | - | புவிநாள் |
| மே 1 | - | உலகத் தொழிலாளர் தினம் |
| மே 2 | - | உலகத் தாய்மார் தினம் |
| மே 3 | - | பத்திரிகை சுதந்திர தினம் |
| மே 8 | - | உலகச் செஞ்சிலுவை தினம் |
| மே 15 | - | உலகக் குடும்ப நாள் |
| மே 17 | - | உலகத் தொலைத்தொடர்பு தினம் |
| மே24 | - | பொதுநலவாய தினம் |
| மே31 | - | புகையிலை எதிர்ப்பு நாள் |
| ஜூன் 4 | - | தாக்குதலுக்குப் பலியான உலகப் பச்சிளஞ் சிறார் தினம் |
| ஜூ 5 | - | உலகச் சுற்றுச்சூழல் தினம் |
| ஜூன் 26 | - | உலக போதைப்பொருள் தடுப்பு தினம் |
| ஜூன் 27 | - | உலக நீரிழிவு தினம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஜூலை *6* | - | விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவக்கூடிய நோய்கள் தினம் |
| ஜூலை *11* | - | உலக மக்கள் தொகை தினம் |
| ஆகஸ்ட் *3* | - | உலக நட்பு தினம் |
| ஆகஸ்ட் *6* | - | ஹிரோசிமா தினம் |
| செப்ரெம்பர் *8* | - | உலக இலக்கிய தினம் |
| செப்ரெம்பர் *16* | - | உலக ஓஸோன் தினம், உலக அமைதி தினம் |
| செப்ரெம்பர் *26* | - | உலக செவிப்புலனற்றோர் தினம் |
| செப்ரெம்பர் *27* | - | உலகச் சுற்றுலா தினம் |
| ஒக்ரோபர் *1* | - | உலக முதியோர் தினம் |
| ஒக்ரோபர் *3* | - | உலக குடியிருப்பு தினம் |
| ஒக்ரோபர் *4* | - | உலக விலங்கு நல தினம் |
| ஒக்ரோபர் *6* | - | உலக ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் *10* | - | உலக அஞ்சலக தினம், உலக முதலாளிகள் தினம் |
| ஒக்ரோபர் *13* | - | உலக இயற்கை அழிவுக் குறைப்பு தினம் |
| ஒக்ரோபர் *14* | - | உலகத்தர நிர்ணய தினம் |
| ஒக்ரோபர் *15* | - | உலக வெள்ளைப்பிரம்பு தினம் |
| ஒக்ரோபர் *16* | - | உலக உணவு தினம் |
| ஒக்ரோபர் *24* | - | உலகச் சிக்கனநாள், ஐக்கிய நாடுகள் தினம் |
| ஒக்ரோபர் *30* | - | உலக வளர்ச்சித் தகவல் தினம் |
| நவம்பர் *29* | - | உலக பாலஸ்தீனியர் ஒற்றுமை தினம் |
| டிசம்பர் *1* | - | உலக எய்ட்ஸ் ஒழிப்பு தினம் |
| டிசம்பர் *10* | - | உலக மனித உரிமைகள் தினம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 ◈ 11 ◈ 1958 |  | 16 ◈ 08 ◈ 2015 |

எமது விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் துடுப்பாட்ட வீரனுமாகிய

**அமரர் சின்னத்தம்பி ரவீந்திரன் (ரவி அண்ணை)**

அவர்கள்

(உரிமையாளர் R. S. பல்பொருள் வாணிபம் - ஆனைக்கோட்டை)

மின்னியது செய்தி

விம்மினோம் நெடியதுயர்

பின்னியது நெஞ்சில் - கலங்கினோம்

என்ன இது? ஏன் மறைந்தீர்?

இறைவனுக்கு உம்மை அழைக்கும்

அவசரம் ஏன்?

*அன்னாரின் பிரிவால்த் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

லைவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
05
11
1958



மறைவு
16
08
2015

எமது சங்கத்தின் பொருளாளரான திருமதி சத்தியா இரவீந்திரன் அவர்களின்
அன்புக் கணவரும் இங்கிலாந்தின் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவரும் தற்போதைய
நிர்வாக சபை உறுப்பினருமான சுகிர்த றஞ்சன் சாந்தா அவர்களின் மைத்துனருமாகிய

## அமரர் சின்னத்தம்பி இரவீந்திரன்

அன்புக்கோர் இலக்கணமாய்
அணைத்ததுவோ நின் கரங்கள்
பாசத்தின் பிறப்பிடமாய்
பக்குவமாய் செயற்பட்டீர்
நீர் ஏற்றிய தீபங்கள்
நின் பாதங்களில் ஒளிர்ந்து கொண்டிருக்க
நீர் மட்டும் ஏன் அணைந்துவிட்டீர்.

நீர் ஆற்றிய பணிகள்
ஈன்ற உதவிகள்
செய்த தருமங்கள்
எமக்களித்த அன்பு பாசம்
எல்லாமே உம் நினைவை
எம் அனைவர் அகத்திலும் நிலைபெற்றனவே.

உங்கள் பிரிவால் துயருறும்
யா/ உ.யரப்புலம் மெதடிசன் மிசன் வித்தியாலயப் பழைய மாணவர் சங்கம், ஆனைக்கோட்டை

எவகிறீன் அச்சகம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 - 2219893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்

அம்பனை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும்
3ம் கட்டை ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட



## அமரர்
## சின்னத்தம்பி இரவீந்திரன்(ரவி)

மண்ணில் - 1958.11.05

விண்ணில் - 2015.08.16

அன்போடும் பாசத்தோடும் எம்மோடு
இணைந்து பண்புடன் வாழ்ந்த நீங்கள்
எம்மை விட்டு மறைந்து போனாலும்
உம் பிரிவுத்துயரம் தாங்காது விம்மி அழுகின்றோம்
நெஞ்சோடு உங்கள் நினைவு நித்தமும்
உறவாட வைத்தும் சென்றீரே!
எம் அருகில் இணைந்து நிற்கும்
உணர்வுடன் அல்லவா ஏங்குகின்றோம்
உங்கள் பாச நினைவுகள் என்றும்
எம்மை விட்டகலாது கண்ணீருடனும்
பற்றோடும் உங்கள் ஆத்மா சாந்திக்காக
இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

3ம் கட்டை ஆனைக்கோட்டை
இளைஞர்கள்

Computerworld - 021 221 7484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

கடந்த 2015.08.16ந் திகதி அகால மரணமடைந்த எமது நண்பி ர.சத்தியானந்ததேவியின் அன்புக் கணவரான **சின்னத்தம்பி ரவீந்திரன்** மற்றும் மைத்துனி **திருமதி விஜயமலர் சிறீகாந்தவேல்** அவர்கள் இருவரினதும் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்



திருமதி விஜயமலர் சிறீகாந்தவேல்



சின்னத்தம்பி ரவீந்திரன்

**திருமதி எ.விக்ரோறியா, திருமதி அ.கலா, திருமதி ப.சுசீலாமணி திருமதி இ.பிறேமா, கே.ஆர்.டேவிற் குடும்பத்தினர்**

(533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1958 . 11 . 05

இறப்பு 2015 . 08 . 16

அம்பனை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும்
3ம் கட்டை, ஆனைக்கோட்டை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## சின்னத்தம்பி இரவீந்திரன் (ரவி)

*(உரிமையாளர் : R.S. பல்பொருள் வாணிபம் - ஆனைக்கோட்டை)*

நேற்று வரை எம்மோடு இருந்தவனே
காற்றோடு வந்த செய்தி கேட்டுகலங்க வைத்ததையா
பண்போடு பாரினிலே பாங்கோடு இருந்தவனே
கண்கெட்ட காலனவன் கருணை இன்றி எடுத்தானோ
அவனியில் தவிக்கவிட்டு அவதியாய் போனதேனோ?

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அன்பால் துயருறும்
அன்பு நண்பன் அ.செல்வராசா

குமார் பிறின்டேர்ஸ், தொ.பே : : 0779920797

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

05 - 11 - 1958



இறப்பு

16 - 08 - 2015

## அமரர் சின்னத்தம்பி ரவீந்திரன்

**அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.**

செய்தி கேட்டுக் கலங்கி நிற்கின்றோம்
செய்வதறியாது திகைத்து நிற்கிறோம் - நீர்
செய்த நன்மைகளை நினைக்கின்றோம் - நீர்
சென்ற இடம் எங்கே, ஐயா.
செய்வதறியாது கலங்கி நிற்கும் - நபர்களுக்கு
உளவளத்துணை செய்தீரே!
உவகையுடன் அவர் வாழ உதவிகள் செய்தீரே - இன்று
கதறி அழும் எங்களுக்கு யார் ஆறுதல் சொல்வார்
தேற்றி எமை ஆதரிக்க யாரையா உளர்?
காலன் உமை அழைத்தானோ - தனக்கு ஆறுதல் சொல்ல
சிரித்த முகம் எங்கே? உதவிய கைகள் எங்கே?
ஏங்கித்தவிக்கும் உமது குடும்பத்திற்கும்,
ஏங்கும் உம் சுற்றத்திற்கும் யாரையா ஆறுதல் சொல்வார்?
ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

***அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

நவாலி.

பிரிவால் துயருறும்
தர்மசீலன் குடும்பம்.

றூபன் பிறின்டேர்ஸ். T.P 021 225 5566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

05 - 11 - 1958



இறப்பு

16 - 08 - 2015

**எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு பகுதித்தலைவர்**
**திருமதி. சத்தியானந்ததேவி அவர்களின் அன்புக் கணவர்**

## அமரர் சின்னத்தம்பி ரவீந்திரன்

அகாலமரணமடைந்தமைக்கு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

கூடி வாழ்ந்த கிளி ஒன்று கூடு விட்டுச் சென்றது
வாடி வதங்க விட்டு ஏங்க வைத்துச் சென்றது
பாடிப் பறந்த பறவைகள் போல் இருவருமே வாழ்ந்தீர்கள்
நாடி வந்த காட்சிகள் நிழல் போல் கண்ணுக்குள் உள்ளது
தனித்து வாழத் துணிவின்றி தவித்து நிற்கும் சகோதரியே
ஆறுதல் கூற முடியாமல் அல்லற் பட்டு நிற்கின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ மானிப்பாய் சென்றி. ஆன்ஸ்
றோ.க.த.க. பாடசாலை,
மானிப்பாய்.

**18.08.2015**

ரூபன் பிறின்டேர்ஸ். T.P 021 225 5566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சித்து உன்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 05 ◈ 11 ◈ 1958 |  | 16 ◈ 08 ◈ 2015 |

எனது நண்பன்
**அமரர் சின்னத்தம்பி ரவீந்திரன் (ரவி அண்ணை)**
அவர்கள்
(உரிமையாளர் R. S. பல்பொருள் வாணிபம் - ஆனைக்கோட்டை)

**லக்ஷ்மி வெதுப்பகம்**
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

வெங்கொடுமைச் சாக்காட்டின்
வெம்மையிலே தாம் வீழ்ந்து
புழுவாகத் துடித்தபோது
அன்புடனும் களிவிரக்கத்துடனும் - எம்
துயரில் பங்குகொண்டு பரிதவித்து - எமை
சொந்தமாகப் பாவித்து
உதவி புரிந்த உற்றவர், சுற்றத்தவர்
சேய்மை மித்திரர்களுக்கும்
அனுதாபச் செய்திகள், அனுப்பியும்
பதாதைகள், அஞ்சலிகள் அச்சிட்டும்
மலர்வளையம் வைத்தும்
அஞ்சலி செலுத்தியோருக்கும்
நேரில் வந்தெம்மை ஆற்றுப்படுத்திய
அன்பிற்குரிய அனைத்து உள்ளங்களுக்கும்
எம் தெய்வத்தின் நினைவுகளையும்
பெருமைகளையும் பதிவுகளாக தந்த
பெருந்தகைகளுக்கும் இந்நூலை அச்சிட்டுத்
தந்த நோபிள் அச்சகத்தினருக்கும்
பேருணர்வுடன் பகிர்கின்றோம் பெருநன்றி.

**மனைவி, குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடைய எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Noble Printers, Jaffna.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org